விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 13 ஷவ்வா 8 இதழ் 137
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-6-1985

### இனப் பிரச்னை ஆரம்பப் பேச்சுக்கள்

## ஜனாதிபதியின் விசேட குழு இவ்வார இறுதியில் பூட்டான் பயணம்!

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள், இந்தியாவில் தங்கியுள்ள ஈழ விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையிலான இனப்பிரச்னை சம்பந்தப்பட்ட ஆரம்ப பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் விசேட தூதுக்குழு ஒன்று இவ்வார இறுதியில் பூட்டான் செல்லவுள்ளது.

அமைச்சரவை பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான கலாநிதி அனந்த திஸ்ஸ டீ அல்விஸ் கொழும்பில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் நேற்று இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அல்விஸ் தொடர்ந்து கூறியதாவது: ''இனப் பிரச்னையின் தற்போதைய நிலைமை] குறித்து அமைச்சரவை விரிவான முறையில் ஆராய்ந்துள்ளது. இந்தப் பிரச்னை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் தீர்வுகாணும் நோக்கத்துடனேயே விஷேட தூதுக்கோஷ்டி ஒன்றை அனுப்புவதாக அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டது' என்றார்.

இந்த விஷேட குழுவுக்கு இந்திய அரசாங்கம் சகல உதவிகளுடன், போக்குவரத்து மற்றும வசதிகளை அளிக்கவுள்ளதாகக் கூறிய அமைச்சர் அல்விஸ், இக்குழுவுக்கு அமைச்சர் ஒருவர் தலைமை வகித்துச் செல்லக்கூடும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். (ரா)

### ● யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி

# அதிபர் ஆனந்தராஜா சுடப்பட்டு மரணமானார்!

(அலுவலக நிருபர் ஏ. வி. எம்.)

**யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. சார்ள்ஸ் எட்வேர்ட் ஆனந்தராஜா (53-வயது) நேற்று மாலை 4-30மணியளவில் இனந் தெரியாத நபர்களால் சுடப்பட்டு மரணமானார். யாழ். றக்கா வீதி வழியாக அவர் தமது ஸ்கூட்டரில் தனியாக வந்துகொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றது.**

அதிபர் ஆனந்தராஜா றக்கா வீதியில் சுடப்பட்டு நிலத்தில் வீழ்ந்துகிடந்த போது அவரை அவ்வழியால் வந்த டாக்டர் ஒருவர் தமது மோட்டார்காரில் ஏற்றிவந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்த்தார்.

இதனையடுத்து அவசர சிகிச்சைப் பிரிவில் உடனடியாகத் தீவிர சிகிச்சைகளை யாழ் ஆஸ்பத்திரியின் விசேட வைத்திய நிபுணர்கள் குழு ஒன்று மேற்கொண்டது.

அதிபர் ஆனந்தராஜா தலையில் மூன்று சூட்டுக்காயங்களுடனும், கழுத்து, வயிற்றுப் பகுதிகளில் தலா ஒரு சூட்டுக் காயங்களுடனும் பெருமளவு இரத்தம் வெளியேறிய நிலையில் சுயநினைவற்றிருந்தார்.

### தலையில் பலத்த சூடு

இறுதியாக சிலமணி நேரத்தின் பின்னர் தீவிர சிகிச்சைப் பிரிவு அறையிலிருந்து வைத்திய நிபுணர் ஒருவர் வெளியே வந்து தலையில் பலமான சூட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளதால் அதிபரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாக அறிவித்தார். தொடர்ந்து மாலை 6-30 மணியளவில் அவரின் உயிர் பிரிந்ததாக அறிவிக்

(8ம் பக்கம் பார்க்க)

## 10வருட அதிபர் பதவி

[யாழ்ப்பாணம்]

கோப்பாயைச் சேர்ந்த திரு. ஆனந்தராஜா சென்ஜோன்ஸ் கல்லூரியிலேயே படித்து, ஆசிரியராகவும், உபஅதிபராகவும் இருந்து, கடந்த 10வருடகாலமாக அக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார்.

இவருக்கு 3 பெண் பிள்ளைகளும் இரு ஆண் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

இம்மாதம் 29ம் திகதி சென் ஜோன்ஸ் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு முன்னதாக நேற்று இடைநிலைப் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அவற்றைப் பார்வையிட்டுவிட்டு திரு. ஆனந்தராஜா வழக்கம்போல தமது நண்பர்களைச் சந்திக்க ஸ்கூட்டரில் றக்கா வீதியூடாகச்சென்று கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பில் குளிக்கச் சென்ற இருவர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

வடமராட்சிப் பகுதியில் இப் பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

## ராணுவ நல்லுறவில் ஆர்வம் காட்டியதால் எதிர்ப்பு!

அரசு அறிவிப்பு!!

(கொழும்பு)

அதிபர் ஆனந்தராஜா யாழ்ப்பாணத்தில் இராணுவத்துடன் பொதுமக்கள் நல்லுறவை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார் என்று அரசதரப்புச் செய்திகள் தெரிவித்தன.

அவை மேலும் தெரிவித்திருப்பதாவது: திரு. ஆனந்தராஜா யாழ்ப்பாணத்தில் இராணுவ பொதுமக்கள் உறவை வளர்ப்பதில் ஆர்வங்காட்டினார்.

இதற்கென அவர் சில கிரிக்கெட் போட்டிகளையும் இராணுவத்தினருடன் மாணவர்கள் விளையாடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்காரணமாக அவர் தீவிரவாதிகளின் எதிர்ப்பைச் சம்பாதித்திருந்தார்'' என்று தெரிவிக்கப்பட்டது.

### கரையோர முகாம்களின்

## சுற்றுடலில் 2 மைல்களுக்கே மீன்பிடி அனுமதி!

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள கடல் பகுதியில் மூன்றுமைல்களுக்குள் மீன்பிடிக்க உத்தரவு வழங்கப்பட்டபோதிலும், ஆயுதப்படையினர் தங்கியிருக்கும் நான்கு முகாம்களின் சுற்றுடலிலுள்ள கடல் பகுதியில் இரு மைல் தூரத்துக்குள் மீன் பிடிக்க வேண்டாமென்று தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, காரைநகர் ஆகிய முகாம்கள் அமைந்திருக்கும் கடல் பகுதியிலேயே இருமைல் தூரத்துக்குள் மீன்பிடிக்க வேண்டாமென்று கேட்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இராணுவ அதிகாரிகள் யாழ் அரசாங்க அதிபரிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் கடற்றொழிலாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இரவு ஊரடங்குச் சட்ட நேரத்தில் கடற்படையினர் கடலில் ரோந்து சேவையிலீடுபட்டிருப்பதால், கடற்றொழிலாளர் அந்த நேரத்தில் மீன்பிடிக்கச் செல்லவேண்டாம் என்றும் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் நன்மை கருதி இவற்றை அனுசரித்து நடக்க வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டிருக்கிறார். (மா)

## முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் காலமானார்!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தனது 54வது வயதில் நேற்று கொழும்பில் காலமானார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம், ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆகியவற்றில் முறையே 1960ம் ஆண்டு உணவு, விவசாய அமைச்சராகவும்; 1970ம் ஆண்டு நீதி அமைச்சராகவும், பின்பு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் நிதி அமைச்சராகவும் இவர் இருந்துள்ளார்.

1960ம் ஆண்டிலிருந்து 1977ம் ஆண்டுவரை தொம்பே

[8 ம்பக்கம் பார்க்க]

## ஒரேஇரவில் 2 நகைக் கடைகளில் 600பவுண்நகைகள் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் இரு நகைக் கடைகளில் துப்பாக்கி முனையில் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான 600 தங்கப் பவுண் நகைகளும், கல்வியங்காட்டில் இருவீடுகளில் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான 100 பவுண் நகைகளும் நேற்று முன்தினமிரவு கொள்ளையடிக்கப்பட்டது.

யாழ் கஸ்தூரியார் வீதியில் என். வி. கந்தையா அன் சன்ஸ் நகைக் கடையில் 10

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஜூன் மாதம் முதல் 3600 வீடுகள் தீக்கிரை

[திருகோணமலை]

திருகோணமலை மாவட்டத்தில் ஜூன் மாத ஆரம்பத்தில் இருந்து இடம்பெற்ற வன்செயல்களினால் சுமார் 3600 வீடுகள் தீக்கிரையாகின இவற்றில் 3500 வீடுகள் தமிழர்களுக்குச்சொந்தமானவை மூதூர்த் தொகுதியின் 22 தமிழ்க் கிராமங்களிலுள்ள வீடுகள் அனைத்தும் தீக்கிரையாகின.

சம்பூர்க் கிராமத்தில் உள்ள 360 வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

திருகோணமலைத் தொகுதியில் திரியாய், குச்சவெளிக் கிராமங்களில் உள்ள தமிழர்களின் பெரும்பாலான வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

## ''ரூபா மூன்று லட்சம் தந்தால் உங்கள் விடயத்தைக் கைவிடுவோம் என்றார் ஹில்ட்டன் பெரேரா!''

வண. பிதா சிங்கராயர் சாட்சியம்

[கொழும்பு]

''மூன்று லட்சம் ரூபா தந்தால் உங்கள் விடயத்தைக் கைவிடுவோம் என்று ஹில்ட்டன் பெரேரா என்னிடம் மெதுவாகக் கூறினார்.'' என்று வணபிதா ஆபரணம் சிங்கராஜா கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி எச். டபிள்யு சேனநாயக்கா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

[8ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

சங்கானை சாந்தி சினிமா விற்கு முன்பாக உள்ள 4 அறை, குசினி, மின்சார வசதி, கிணறு என்பவற்று டன் கூடிய 3 பரப்பு வளவும் வீடும் விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்க: கா. பாக்கியநாதன், ''மரக்காலை உரிமையாளர்'' சித்தங்கேணிச் சந்தி. 4042

நல்ல நிலையிலுள்ள 143 K நஷனல் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு தொடர்பு: பொ. செல்வத்துரை, கூளாவடி ஒழுங்கை, ஆனைக் கோட்டை. 4020

மூளாய் ஆஸ்பத்திரி, தபாற் கந்தோர், பஸ் தரிப்பு ஆகிய வற்றிற்கு அண்மையில் சகல வசதிகளும் உள்ள வீடும் 3 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-பொ சிவபாலன், சட்டத்தரணி, சித்தங்கேணி. (3928)

10 தொன் எடைப்பொருட் களை எடுத்துச் செல்லக்கூடிய ரெயிலர் 'Trailer' விற்பனைக்கு உண்டு தொடர்பு த. பெ. 77, மில்க்வைற், யாழ்ப்பாணம். 4045

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு கிலோ ரூபா. 250/- பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 4030

செம்பு, பித்தளை, அலுமினிய கழிவுகள் உயர்விலைக் குப் பெறப்படும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 4031

## தேவை

ஸ்ரான்லி வீதியில் அமைந் துள்ள ஸ்தாபனத்திற்கு நல்ல அனுபவமும், நேர்மை, நம்பிக்கையுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் [Security Officer] தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4018 C/O ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 4018

வீட்டில் சகல வேலைகள் பார்ப்பதற்கு பெண் ஒருவர் தேவை. வயது 20—35 வரை உணவும் தங்குமிட வசதியும் தகுந்த வேதனமும் வழங்கப் படும். நேரில் உடன் வரவும். ''ஷாஹி ஷீபா, ஆத்ம ஆரோக்கிய நிலையம், 125, கடற்கரை வீதி, குருநகர். (பழைய பொலிஸ் நிலையத் திற்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். 40371

வொக்ஸ் வேகன் 1300 டொயட்டா K. V. 20, 25 பேஜோ 504, 404 தேவை தொடர்பு கொள்ளவும்: கிறிஸ்டல் பலெஸ், 158 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 4055

நல்ல நிலைமையிலுள்ள மொறிஸ் மைனர் அல்லது வொக்ஸ் வக்கன் கார் உடன் தேவை, ஆகக்கூடிய விலை 30 000/- காருடன் சனி, ஞாயிறு தினங்களில் நேரில் வரவும். அ. ஆனந்தநடேசன், 12, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர். 4035

## வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் சகல வசதிகளுடன் விசாலமான கடையொன்று (60'X15') வாடகைக்கு உண்டு. விண்ணப்பிக்க விளம்பர இல: மே/பா., ஈழநாடு. 4027

## தவறிவிட்டது

முத்துலிங்கம் புனிதலிங்கம், கதிரேசன் கோவில் வீதி, ஊர்காவற்றுறை எனும் விலாச முடைய தேசிய அடையாள அட்டை (இல. 601022176V) தவறிவிட்டது, கண்டெடுத்த வர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 4038

## வைத்தியம்

ஜவனப்பிரகாச லேகியம்' இயற்கையான உயிர்ச்சத்து சி நிறைந்தது. தினம் உபயோகித்து வர வளரும் சிறுவர்க்கும், வயோதிபர்க்கும் நாட்பட்ட இருமல், குரல் கம்முதல், மெலிவு, நரம்புத் தளர்ச்சி, பலவீனம், இளமையில் முதுமையடைதல் நீங்கி, ஞாபக சக்தியையும், இரத்த விருத்தியும், மனோதிடத்தையும் ஊட்டும் பிரசித்தமான ஆயுர்வேத டானிக். எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும் மங்களபதி தயாரிப்பை கவனித்து வாங்கவும். Dr. மங்களாம்பிகை D.A.M, மங்களபதி வைத்தியசாலை, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். 3600

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை வறுத்தலை விளானைச் சேர்ந்த காலஞ் சென்ற கந்தையா சுந்தரலிங்கம் என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்
கந்தையா சுந்தரலிங்கம்
கைம்பெண் கமலாவதி
''தவ வாசா'' வறுத்தலை விளான். தெல்லிப்பழை
மனுதார்

மரணசாதன நியாதிக்கம் } இல: ரி/223

எதிராக

1. சுந்தரலிங்கம் ரவிச்சந்திரா, இல 40 கென்றிக் அவன்யூ, லண்டன் தனது தத்துவகாரன் மனுதாரர் மூலம்
2. சுந்தரலிங்கம் மகள் சந்திரிகா
3. சுந்தரலிங்கம் மகள் சித்திரகலா இருவரும் வறுத்தலைவிளான், தெல்லிப்பழை

எதிர்மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இதனால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப் பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985ம் ஆண்டு ஆனி மாதம் 17ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்
பதிவாளர்

மூ யோககுமார்
மனுதாரின்
சட்டத்தரணி 4021

## போட்டி முடிவுகள்

[ஊரெழு]

ஊரெழு கலைவாணி சன சமூகநிலையத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட கட்டுரை பேச்சுப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் விரைவில் நடைபெற விருக்கிறது.

பின்வருவோர் பரிசில்கள் பெறுகிறார்கள். கட்டுரைப் போட்டி; செல்வி கி. மேனகா, செல்வன் தி. உதயசூரியன், செல்விகள் சோ. தர்சினி, சீ. மாதினி, கி. சோழமாதேவி. பேச்சு மேட்டி செல்விகள் கி. சுஜாதா பூ. உசானி, சி. சந்திரிகா, இ. நளினி.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த மரணசாதனமின்றி மரணித்த பேராயிரம்பிள்ளை லலிதாதேவியின் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில்—

— மரணமெய்தியவர்.
கந்தையா பேராயிரம் பிள்ளை,
சுதுமலை, மானிப்பாய்.
— மனுதாரர்.

வழ. இல: தத்துவம்/3816

எதிர்

1. பேராயிரம்பிள்ளை கிரிதரன்,
2. பேராயிரம்பிள்ளை முரளிதரன்,
3. பேராயிரம்பிள்ளை கௌசல்யா,
4. பேராயிரம்பிள்ளை அகிலா,
எல்லோரும் சுதுமலை மானிப்பாய்
பராயமற்ற 2ம், 3ம், 4ம் பெயர்வழிகாரரின்
வழக்குப் பாதுகாவலன்
5. துரைராசா ஆனந்தீஸ்வரன்,
செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
— எதிர்வாதிகள்.

மேற்குறித்த இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேற்காணும் இறந்தவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள எவரும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12-ம் திகதி காலை 9-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இந் நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகிறது.

1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4ந் திகதி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1985–5 31

காரணம் காட்டும் திகதி 85-7-19க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தவர்:
ச. கிருஷ்ணகுமார்,
மனுதாரின் சட்டத்தரணி.
3940

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## இரண்டாவது நினைவஞ்சலி

திரு. க.
சடாட்சரம்
உதவி மின்
பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை



மண்:
13-04-1945

விண்:
27-06-1983

நிழல்தரும் மரமென தங்களை நினைத்திருந்தோம். நிலையான நிழல்தேடி இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். எங்கள் உயிருள்ளவரை தங்கள் நினைவலைகள் எம்மை விட்டகலா. தங்கள் ஆத்மா இறைவனடிசேரப் பிரார்த்தித்து நிற்கும்.

மனைவி, பிள்ளைகள்.

''லதா இல்லம்'',
பிரதான வீதி, தொண்டைமானாறு. 3938



## 8-ம் நாள் ஞாபகார்த்த ஆராதனை

செல்வி
அன்னரத்தினம்
உவில்லியம்

அவர்களின் மறைவை ஒட்டி ஓர் ஞாபகார்த்த ஆராதனை 28-06-1985 வெள்ளிக்கிழமை முற்பகல்10-30 மணிக்கு அச்சுவேலி கிறிஸ்தவ தேவாலயத்தில் நடாத்தப்படும்.

அத்தருணம் அவரின் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் வழிபாட்டில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
(4036) அச்சுவேலி.

## 61ம் நாள் நினைவஞ்சலி

பொன்னம்பலம் சந்திரகுமார் (சந்திரன்)

வந்துதிப்பு:
31-05-1964

கொன்றெழிப்பு:
28-04-1985



அன்புடனும் பண்புடனும் பக்தியுடனும் எம்முடன் வாழ்ந்து உயர் கல்வி கற்றுக்கொண்டே எங்களெல்லோருக்கும் உதவியாயிருந்து ஆறுதல் தந்தாய். ஞாயிறு அன்று ஆலயத்திலிருந்து திரும்புகையில் கயவனின் குண்டினால் தாக்குண்டு இம்மண்ணினின்று நீங்கிய எங்கள் குலவிளக்கே, உன் நினைவு எங்களை விட்டகலாது. உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பாசப்பிணைப்பின் பிரிவால் வாடும்

ஐயா, அம்மா, அக்கா, அத்தான், அண்ணா, தம்பிமார், மருமகன், பேரன், பேத்தி பெரிய ஐயா, பெரியம்மா, சின்னஐயா, சின்னயம்மா, குஞ்சிஐயா, குஞ்சியம்மா, மாமாமார், மாமிமார், அக்காமார், மச்சான்மார், அண்ணன்மார், மச்சாள்மார், தங்கைமார், நண்பர்கள்.

அன்னாரின் இறுதியாத்திரையின்போது சகல விதத்திலும் உதவி புரிந்த இளைஞர்களுக்கும், கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினருக்கும், ஏனையோர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கதிரைவேற்பிள்ளை வீதி,
பருத்தித்துறை
(4053)

# அமெரிக்க பயணிகளை விடுவிக்காவிடில்

# லெபனுன் மீது பொருளாதார முற்றுகை

## அமெரிக்க அதிபர் றீகன் எச்சரிக்கை!

(லண்டன்)

கடத்தப்பட்ட அமெரிக்க விமானத்தின் 40 பயணிகளைப் பிணையாட்களாகப் பிடித்து வைத்திருக்கும் ஷியா முஸ்லிம்கள் அந்தப் பயணிகளை விடுவிக்காவிட்டால் லெபனுன் மீது ஓரளவு பொருளாதார முற்றுகை விதிக்கப்படுமென்று அமெரிக்க ஜனுதிபதி திரு. றீகன் எச்சரித்திருக்கிருர்.

பெய்ரூட் விமான நிலையத்தை மூடுவது, லெபனுனுக்கான சப்ளைகளை நிறுத்துவது இந்த நடவடிக்கையில் அடங்கும்

இதேசமயம் அமெரிக்க பயணிகள் விமானம் கடத்தப்பட்டதையடுத்து லெபனுனுக்கு விமானங்கள் செல்வதன் மீது தடை விதிக்கவேண்டுமென்று எயர்லைன் பைலட்டுகளின் சர்வதேச சம்மேளனம் கேட்டுக்கொண்டிருக்கிறது

40 அமெரிக்கப் பயணிகளும் விடுவிக்கப்பட்டு, லெபனுன் போதிய பந்தோபஸ்து அளிக்கும்வரை இந்தத் தடை நீடிக்கவேண்டுமென்றும் சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர் சொன்னூர்

இந்தப் பணியாட்கள் நெருக்கடியைத் தீர்ப்பதில் அமெரிக்காவுக்கு இஸ்ரேல் ஒத்துழைப்புத் தருமென்று உறுதி கூறும் கடிதத்தை முன்னதாக இஸ்ரேல் பிரதம மந்திரி அமெரிக்க அதிபருக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இந்த 12 நாள் நெருக்கடியைத் தீர்ப்பதில் காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை என்று பெய்ரூட்டில் ஷியா முஸ்லிம்களின் தலைவர் திரு. நபிபெரி கூறினுர். (க)

### பம்பாயில் பேய் மழை, 25 பேர் பலி

(புதுடில்லி)

பம்பாயில் பெய்த பேய் மழையினுல் சுமார் 25 பேர் பலியானுர்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

இம்மழையினுல் பலகட்டடங்கள் இடிந்து விழுந்ததினுல் இவர்கள்பலியானுர்கள். (க)

### அமெரிக்க ராஜாங்க அமைச்சில்

(நியுயோர்க்)

அமெரிக்க ராஜாங்க அமைச்சு செயல்படும் கட்டிடத்தின் 7-வது மாடிக்கு ஆயுதத்துடன் சென்ற ஒரு நபர் அங்கிருந்த தனது தாயைச் சுட்டுக் கொன்றுவிட்டு தானும் சுட்டுக்கொண்டு மரணமானுர். இந்தக்கட்டிடத்துக்குள் இவர் ஆயுதத்துடன் எப்படி சென்ருர் என்பது அதிகாரிகளுக்குப் பெரும் புதிராகவுள்ளது.

## 'சகல பொறுப்புவாய்ந்த இயக்கங்கள் தலையிடவேண்டும்'

### யாழ். ஐ. வி. ச ஊழியர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கக் கொள்ளைகள் தொடர்பாகச் சகல பொறுப்புவாய்ந்த இயக்கங்களும் தலையிட்டு எமது ஸ்தாபனம் மீண்டும் இயங்குவதற்கும், பட்டினிச் சாவால் பரிதவிக்கும் ஊழியருக்கு விமோசனம் அளிக்கும்படியும் மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்கிருேம்

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர்கள் நேற்று வெளியிட்ட துண்டுப் பிரசுரமொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது;

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தனியார் ஸ்தாபனமாகிய யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கம் சென்றவருடம் சில விஷமிகளால் முற்ருகத் தீக்கிரையாக்கப்பட்டது சகலரும் அறிந்ததே. இருந்தும் நாம் எத்தனையோ முறை மன்ருடி எம்மைக் கொள்ளையடிக்காதீர்என வேண்டுகோள் விடுத்தும், இருபது தடவைகளுக்குமேல் கொள்ளை அடிக்கப்பட்டும், இதுவரை எவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் காரணமாக எமது ஸ்தாபனம் மிகவும் இக்கட்டான நிலையில் ஒரு சில கிளை ஸ்தாபனங்களை மூடிவிடவேண்டிய நிலைக்கு உள்ளாகியது இருந்தும் சென்ற மாதம் 1ம் தேதி பொறுப்பற்ற ஓர் இயக்கம் எமது களஞ்சிய அறையிலிருந்து சுமார் பதினெரு லட்சம ரூபாய் பெறுமதியான சிகரட்டையும், வேறு பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டது. மீண்டும் சென்ற மாதம் 24ம் திகதி பொறுப்பற்ற வேருேர் இயக்கம் சுமார் ஐந்து லட்சம் பெறுமதியான சிகரட்டை வழிப்பறிசெய்தது இதனுல் எமது ஸ்தாபனம் முற்ருக மூடப்பட்டுச் சுமார் இருநூறு ஏழைத் தொழிலாளர் குடும்பங்கள் வாழ வழியின்றித் தவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, சகல பொறுப்புவாய்ந்த இயக்கங்களும் இதில் தலையிட்டு எமது ஸ்தாபனம் மீண்டும் இயங்குவதற்கும், பட்டினிச் சாவால் பரிதவிக்கும் ஊழியர்க்கு விமோசனம் அளிக்கும்படியும் மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்கிருேம். (க)

## மாணவரின் திறமைகளை வி. போட்டிகள் வெளிப்படுத்தும்

(மாவிட்டபுரம்)

ஒவ்வொரு மாணவனும் தன் விளையாட்டின் திறமையை வெளிக்காட்ட விளையாட்டுப் போட்டிகள் உதவும்.

இவ்வாறு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் வித்தியாலய அதிபர் திரு. நா. கணேசபிள்ளை கூறினுர்.

வருடாவருடம் மிகப் பிரமாண்டமான முறையில் கொண்டாடப்படும் மேற்படி வித்தியாலய விளையாட்டுப் போட்டி இம்முறை ஆடம்பரமற்றமுறையில் நடாத்தப்பட்டது

வித்தியாலய அதிபர் திரு. நா. கணேசபிள்ளை மேலும் கூறியதாவது:

ஒரு மாணவனிடம் தன்னிகரில்லாத் திறமை இருக்கும். அத்திறமையை அவன் வெளிப்படுத்த சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை. அத்திறமையைவெளிக்காட்ட இதுபோன்ற விளையாட்டுப்போட்டிகள் நடாத்தப்பட வேண்டியதவசியம்.

மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்து கொண்டு தம் திறமையை வெளிக்காட்ட வேண்டும் என்ருர்.

மேற்படி போட்டியில் முதலாம் இடத்தை சத்தி இல்லமும் கீர்த்தி, சாந்தி, ஜோதி இல்லங்கள் முறையே 2ம், 3ம், 4ம் இடங்களையும் பெற்றன.

## ரஜீவின் அமெரிக்க விஜயம்:

# இரு நாடுகளின் உறவு மேம்படும்

## அமெரிக்க தூதர் நம்பிக்கை

(சென்னை)

பிரதம மந்திரி திரு. ரஜீவ் காந்தியின் அமெரிக்க வஜயத்தின் பயனுக,பாரதத்திற்கும் அமெரிக்காவிற்கு மிடையிலான உறவுகள் மேம்படும் என்று பாரதத்திற்கான அமெரிக்க தூதர் தெரிவித்துள்ளார்

சென்னையில் நிருபர்களிடம் பேசிய அவர் பாரதப்பிரதமரும், அமெரிக்கா ஜனுதிபதியும், தங்களுக்கிடையே தொடர்புகள் ஏற்படுத்திக்கொண்டு பல்வேறு பிரச்னை பற்றி மனந்திறந்து பேசியிருக்கின்ருர்கள் என்று கூறினுர்.

அவர்கள் இவ்வாறு வெளிப்படையாக பேசியிருப்பது இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியாகும் என்றும் அவர்குறிப்பிட்டார். (க)

## யாழ்மாநகரசபையின் எஞ்சிய பகுதி நல்லூருக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் எஞ்சியிருந்த கட்டடத்தில் இயங்கிவந்த இரு அலுவலகப் பகுதிகளும் நல்லூர்ப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மின்சாரப் பகுதியும், மராமத்துப் பொறியியலாளர் பகுதியுமே இடமாற்றம் செய்யப்பட்டவையாகும்.

குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்ட மாநகர சபைக் கட்டடத்தின் கிழக்குப் பக்கமாக உள்ள கட்டடங்களில் குறிப்பிட்ட இருவேலைப் பகுதிகளும் இயங்கிவந்தன.

இப்பொழுது நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அண்மையிலுள்ள சட்டத்தரணி ஒருவரின் மாடி வீட்டுக்கு இரு அலுவலக வேலைப் பகுதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

### மயிலிட்டி வடக்கு கி. அ. சங்கம் உதயம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்பணக் கூட்டம் வலிகாமம் வடக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. த. ஸ்ரீபதி தலைமையில் மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது மயிலிட்டி வடக்குக் கிராம சேவைஅலுவலர் திரு வே. நடராசா, விசேட சேவை உத்தியோகத்தர் திரு வே, வன்னியசிங்கம் ஆகியோர் சமுகமளித்திருந்தனர் உத்தியோகத்தர்கள் அனைவரும் சபையோரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர் வலி. வடக்கு உ. அ. அதிபர் இ. சுப்பிரமணியம், தலைவர் ச. அருணுசலம், துணைத் தலைவா ச சின்னத்துரை, இ. செல்லத்துரை, செயலாளர் வே. மாணிக்கம், துணைச் செயலாளர் வ. மகாதேவன் பொருளாளர் க. சுவாமிநாதன் உறுப்பினர்கள். சி. ஐயாத்துரை, சி. சந்திரகுமார், இ. கிருஷ்ணன் செ, அன்னராசா, மூ. கணபதிப்பிள்ளை வ புஷ்பதேவன், க.இ. செல்லத்துரை கணக்காளர் க. கைலயங்கிரிச் செல்வன்,

### கந்தவனக் கடவை திருவிழா

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தவனக் கடவை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் மகோற்சவம் சென்ற 18ம் திகதி செவ்வாய்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது வரும் 30ம் திகதி சப்பரமும் அடுத்தமாதம் 1ம் திகதி ரதோற்சவமும் இடம் பெறும் அடுத்தநாள் தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவெய்தும்.

### அபிவிருச்சங்க நிர்வாகிகள்

(வேலணை)

சரவணை சின்னமடு றே. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூடடம் பாடசாலை அதிபர் திரு. அ. அலோசியஸ் தலைமையில் நடைபெற்றது சங்கத்தின் புதுவருட செயற்குழுவின் பினவருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ அலோசியஸ், செயலாளர்: திரு. மா. டெமன்போட், பொருளாளர்: திருமதி ஹரியற் ஸ்ரீபன் நிர்வாகசபை உறுப்பினர்கள் 12 தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# இந்திய விமான விபத்து——

# 'கார்க்' நகரில் இந்தியக் குழுவின் விசாரணை ஆரம்பம்!

(லண்டன்).

அத்திலாந்திக் மாகடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விழுந்த எயர் இந்திய ஜம்போ ஜெட் விமானத்தின் தகவல் பதிவுக் கருவியையும், ஒலிப் பதிவுக் கருவியையும் தேடும் பணி தொடர்கிறது.

இவற்றை மீட்பதற்காக ஐரிஸ் அரசு விசேட ஆய்வு கலமொன்றை அனுப்பியிருக்கின்றது. இந்தப் பணிக்காக விசேஷ சாதனங்கள் பொருத்தப்பட்ட பிரிட்டிஷ் கப்பல் ஒன்று விமானம் விழுந்த இடத்திற்கு நாளைக் காலை போய்ச் சேரவுள்ளது.

அமெரிக்கா மற்றும் கனடா நாட்டுக் கப்பல்களும் இந்த முயற்சியில் ஈடுபடும்.

இந்தக் கருவிகள் 2010 மீற்றர் ஆழத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பதிவுக் கருவிகள் நாலு வார காலத்திற்கு ஒலிக் குறிகளை அனுப்புமென்றும் நிபுணர்கள் நம்புகிருர்கள்.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரகத்தின் செயலர் தலைமையில் சென்றுள்ள இந்திய உயர் அதிகாரிகள் குழு அயர்லாந்தின் கார்க் நகரில் தனது விசாரணையை ஆரம்பித்திருக்கிறது

சடலங்கள் கெட்டுப்போகாமல் பாதுகாக்கும் ஏற்பாடுகளும், பிரேத பரிசோதனையும் இந்தவார இறுதிவரை நடைபெறுமென்று டாக்டர் செத்து, சிவில் விமானப் போக்குவரத்து மந்திரி திரு அசோக் கிலாட்டிடம் தெரிவித்திருக்கிருர். இந்தப் பணி முடிவடைந்ததும் உறவினர்களை அயர்லாந்துக்கு அனுப்புவதுபற்றி முடிவுசெய்யலாம் என்றும் அவர் மேலும் கூறினுர்.

விமான விபத்தில் இறந்து போனவர்களின் உறவினர்களுக்கு இலவச உணவு மற்றும் உறைவிட வசதிகள் அளிப்பதற்குத் தயாராகஇருப்பதாக கார்க் நகரில் பல குடும்பங்கள் ஐரிஸ் அதிகாரிகளிடம் தெரிவித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இறந்தவர்களை அடையாளம் கண்டுபிடிப்பது தொடர்பாக உறவினர்களைச் சந்திக்கும் பொருட்டு ஐரிஸ் கம்பெனியொன்றின் இரண்டு பிரதிநிதிகள் புதுடில்லி வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. (க)

### மணிவாக்கு

தன்னம்பிக்கை அறிவின் வேலைக்காரனுக இருத்தல் வேண்டும். அறியாமையை அணிகலனுயுடைய மக்கள் உண்மையான விடயத்தை சுலபமாய் நம்புவதில்லை.

— இங்கர்சால்

## நமது நோக்கு

# ராஜதந்திரம்-ராணுவதந்திரம்

"நாய்கள் குரைக்கட்டும், பாலைவனப் பயணம் தொடரட்டும்" என்று கொள்வதே இன்றைய சமாதான எத்தனங்களுக்கு மிகப் பொருத்தமான மனப்போக்கு.

41-ம் நாள் நினைவஞ்சலியை எங்கள் பத்திரிகையில் அடிக்கடி படிப்பவர்கள் கண்ணில் நீர் வற்றிப் போகும் நிலையில் இருப்பது இயற்கை.

எத்தனை அருமை உயிர்கள், முழுக் குடும்பங்கள், இளைஞர், யுவதிகள், குழந்தைகள் இலங்கை ராணுவத்தின் கொடுமைக்குப் பலியானது இலகுவில் மறக்க முடியாத துயரம்.

பிறந்த பொன்னுட்டில் இதுவே மக்கள் கதியென்ருல், வெளியுலகில் நடந்து வரும் அட்டூழியங்கள் இதற்குப் போட்டியாகவேகாணப் படுகின்றன.

வெளி உலகில் நடைபெறும் கொடிய சம்பவங்களுககும், எங்கள் உள்நாட்டுப் 'போருக்கும்' எவ்விதத் தொடர்பும் இல்லையென்று எடுத்த எடுப்பில் சொல்லி விடமுடியாது.

உலகளாவிய நிலையில் தொடரும் ராஜ, ராணுவ தந்திரப் போட்டி ரஷ்ய கம்யூனிசத்திற்கும் அமெரிக்க முதலாளித்துவத்திற்கும் என்பது மிகத் தெளிவானது.

இதனை மங்கலமாகச் சொல்லமுடியுமானுல் அமெரிக்க ஜனநாயகத்திற்கும் ரஷ்ய பொது உடைமைச் சித்தாந்தத்திற்கு மிடையே உள்ள போட்டி எனலாம்.

இன்னுமொரு படி உயர்த்தவேண்டுமானுல் இன்றைய போர் 'சுதந்திரத்திற்கும அடிமைத்தனத்திற்கும்' என்று அமெரிக்கா சொல்லும்; 'மனித விடுதலைக்கும் முதலாளித்துவ சுரண்டலுக்குமென ரஷ்யா சொல்லும்.

கெடுபிடி யுத்தம் என்ருலென்ன, உண்மையில்நடைபெறும் போர் என்ருலென்ன, உலகில் எப்பகுதியிலும் - நிக்கரகுவா, லெபனுன், நமீபியா, ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா போன்ற இடங்களில் இந்தப் போட்டி - ராஜதந்திரப் போட்டி, ராணுவப் போட்டி வியாபித்துவருகிறது.

இந்த வியாபகம் சர்வ வியாபகரான முழுமுதற் கடவுளைத் தவிர வேறெவருக்கும இலகுவில் புலப்படாது.

மத்திய அமெரிக்காவில் நாம் முன்னரும் குறிப்பிட்டதுபோல நிலைமையைப் புரிந்துகொள்வது உலக விவகாரங்களில் அனுபவம் பெற்ற வாசகர்களுக்கே முடியும்.

எல்சல்வடோரில் ஆட்சிக்கு எதிராகக் கெரில்லாப் படைகள் போர் நடத்துகின்றன. அண்மையில் அங்கு சில அமெரிக்கப் பிரஜைகள் பலியானது ஜனுதிபதி றீகனுக்குப் பெரும் ஆத்திரம் ஊட்டியிருக்கிறது.

கெரில்லாப் படைகள் என்ருல் அமெரிக்க ஆட்சியாளருக்கு எதிரானதென்று கொள்ளமுடியாது. நிக்கரகுவாவே இதற்கு நல்ல உதாரணம். அந்த ஆட்சிக்கு எதிராகப் போராடும் கெரில்லாக்களுக்கு ஜனுதிபதி எவ்வித உதவ்யும் புரிய ஆயத்தம்.

ராஜதந்திரம், ராணுவ உதவி மட்டுமல்ல, ராணுவ தந்திரம்கூட மிகச் சிக்கலாகப் பரவியுள்ள உலகில் நாம் வாழ்கின்ருேம்.

உள்ளூரில் வீட்டில் வாழ்வதே பாதுகாப்பற்றநிலையென்ருல், றெயிலில், பஸ்ஸில் பிரயாணம் பற்றி பேசத்தேவையில்லை வெளி உலகில், சர்வதேச ரீதியில் விமானப்பயணம் என்ன நிலையென்பது கடந்த எயர் இந்தியா விமான விபத்து விளக்குகிறது.

சர்வதேச பயங்கரவாதம் என்றொரு தான் தோன்றிப் பூச்சாண்டி எங்கும் இருக்க முடியாது.

வல்லரசுகளின் போட்டி பற்பல ரூபங்கள் எடுக்கின்றது அதன் கொப்புகள், கிளைகள், இலைகள் மகாகவியின் கற்பனைக்கே எட்டாதிருக்கும்.

அமெரிக்க விமானக்கடத்தல் ராஜதந்திரமா ராணுவ தந்திரமா என்று கேடபது முட்டாள் தனம்; இரண்டுமாயிருக்க ஏன்முடியாது என்பதே விடை.

இந்திய விமான விபத்துப்பற்றி கண்ணீர் விடுவதாகக் காட்டிக் கொள்பவரெல்லாம் அந்நாட்டினதோ, அல்லது அதன் ஆட்சியினதோ நண்பரெனலாமா?

எனவே இன்று உலகில் பரவியிருக்கும் ராஜ, ராணுவ தந்திர நஞ்சு கலவாத ஊரோ, நாடோ தேசமோ எங்குமில்லையெனலாம். இந்தப் பின்னணியில் இலங்கைக்கு சமாதான வாழ்வு கிட்டுவது இலகுவானதா.

'யார் குற்றியும் அரிசியாகட்டும்' என்ற நிலையில் நாட்டின் பொதுமக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர்.

உண்மையான சமாதானம் ஏற்பட்டால் நமக்கு இடமில்லையே என்று நினைப்பவர் நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டு அரசியலிலும் உண்டு.

ஜனுதிபதி ஜெயவர்த்தன கூறியது போல் 'அனுராதபுரத்தாக்குதலே அரசியல், தீர்வுக்கு வழிவகுத்தது. என்பது உண்மை இதில் ராஜதந்திரம், ராணுவ தந்திரம் இரண்டும் இரண்டறக் கலந்திருப்பதை யாரும். எப்பவாவதும் அறிய முடியுமா?

---

### வானெலியில் ஒலிபரப்பக் கோரிக்கை

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர், தீர்த்த உற்சவங்களை இலங்கை வானெலியில் ஒலிபரப்ப நடவடிக்கை எடுக்கும்படி கோரப்பட்டுள்ளது.

---

"பல்கலைக்கழகங்கள்———

# சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு உதவ வேண்டும்!"

## பேராசிரியர் கணேசலிங்கம்

(மாவிட்டபுரம்)

"பல்கலைக்கழகங்கள் அறிவை விருத்தி செய்வதுடன் நின்றுவிடாது ஆக்க பூர்வமான ஆராய்ச்சிகளிலும் கண்டு பிடிப்புகளிலும் ஈடுபட்டு சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உதவ வேண்டும். அப்போதுதான் கல்வியினுல் ஏற்படக்கூடிய பயனை நாடும் மக்களும் பெற்றுக் கொள்ள முடியும்."

இவ்வாறு தெல்லிப்பழை மகஜனுக் கல்லூரி ஸ்தாபகர் தினவிழா, பரிசளிப்பு விழா ஆகியவற்றில் கலந்து கொண்டு "ஆய்வுகளும் அபிவிருத்தியும்" என்னும் தலைப்பில் பேருரை ஆற்றிய யாழ். பல்கலைக்கழகவிலங்கியல்துறைத்தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் கூறினுர்.

பாவலர் துரையப்பாபிள்ளை அரங்கில் கல்லூரி அதிபர் திரு. வே. கந்தையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கல்வியறிவின் அவசியத்தை உணர்ந்து நாம் அதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிருேம் கல்வியறிவு மனிதத் தன்மையை வளர்த்து மனிதனை பூரணத்துவமுள்ளவனுக மாற்றுகிறது மாணவர்கள் கல்வியில் அக்கறையுடன் இருக்க வேண்டும் ஆசிரியர்கள் கடமையுணர்ச்சியுடன் போதிக்க வேண்டும் பெற்ருேர்கள் கல்விகற்க முடிந்தளவு செலவு செய்யவேண்டும் இந்தஅடிப்படையில் செயல்பட்டால் கல்வி நிலை மேன்மையுற முடியும்.

"பல்கலைக்கழகங்களின் சக்தி கல்வித்துறையில் முக்கிய சக்தியாக விளங்குகின்றது பல்கலைக்கழகக் கல்வி மூலம் அறிவை, ஆற்றலை, மதிநுட்பத்தை, உலகளாவிய தத்துவங்களை நாம் அறிய முடிகிறது. பல்கலைக்கழகங்களால் தயார் செய்யப்படும் மனிதன் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கும், தனக்கும் பயன்படும் வகையில் செயல்படமுடிகிறது. ஆனுல் பல்கலைக்கழகக் கல்வி அறிவைமட்டும் விருத்திசெய்வதாக இருக்கக்கூடாது. விஞ்ஞான வளர்ச்சிக்கு வழி சமைத்து தொழில்நுட்ப யுகத்திற்கு இட்டுச் செல்லும் சாதனமாக அமையவேண்டும். பட்டதாரிகளை உருவாக்கும் ஸ்தாபனங்களாக விளங்காமல் ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் ஆகியவற்றில்கவனம்செலுத்தவேண்டும்.

வளர்ந்துவரும் நாடுகளிலும், மேலைத்தேய நாடுகளிலும் பல்கலைக்கழகங்கள் பல்வேறு புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு பல கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்துவருகின்றன பல்கலைக்கழகங்கள் அவை அமைந்துள்ள பிரதேசத்துடன் தொடர்பை வளர்த்து மனிதவளம் இயற்கை வளம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. நமது நாட்டிலும் பல துறைகளில் ஆய்வுகள மேற்கொள்ளப்படுகின்ற போதும் அவை போதுமானவையல்ல. முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு துறைகளிலும்ஆய்வுகள் இடம் பெற வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் தொழில் நிறுவனங்களின் தொழில் நுட்பத்திற்கும் உதவும் வகையில் செயல்படவேண்டும். பல்கலைக்கழகங்களுக்கும் தொழில் நிறுவனங்களுக்கு மிடையில் தொடர்புகளை வலுப்படுத்தி பல்கலைக்கழக ஆய்வுகள் தொழில் நிறுவன தொழில் நுட்பத்திற்கு உதவ வழி சமைக்க வேண்டும். இதன் மூலம் கல்வியினுல் பெறக் கூடிய பயனை நாடும் மக்களும் பெறமுடியும்.

---

## ✶ இன்று பிறந்ததினம்

# பண்டிதமணியை வாழ்த்துவோம்

பத்தொன்பதாம் நூற்ருண்டில் தோன்றிய பெருமைக்குரிய பெரியவருக்கு இன்று எண்பத்தாறு நிறைந்து எண்பத்தியேழு ஆகிறது தாய்வழியால் தனங்கிழப்பில் பெரிய நெல்வயல், தந்தை வழியால் மட்டுவிலில் மருதநிலவளம். தந்தை சின்னத்தம்பி அவர்களின் மனம் பெரிது தருமர் என்பது ஊரவர்கைத்த பெயர். யாவர் எவர் காணியைப் பிடித்தாலும், எல்லையை கூட்டினுலும் போறது போகட்டும், பொருள் போகுமிடம் புண்ணியம் என்பாராம். பாரதம், கந்தபுராணம், இராமாயணத்தின் பெரும்புலமை, கதை சொல்வதில் பேராற்றல் பெற்றபிள்ளை ஒரேஒரு மைந்தன். வாட்டசாட்டமாய் பொன்மேனியராய்ப் பிறந்தவர். பெற்ருேர் அன்புடன் வைத்தபெயர் கணபதிப் பிள்ளை. விநாயகர் கோயிற் பரிபாலன உரிமையும், குடும்பத்தில் முன்னெரு கணபதிப் பிள்ளை வாழ்ந்தபெருமையும், இப்பெயரில் அமைந்தன என்பர். பத்து வயதுவரை படித்த ஆரம்பப் படிப்பை நிறுத்திக் கொண்டு எட்டுவருடகாலம் மருதவள மூல்லைநில பரிபாலனம், மாடுமேய்க்கும் தொழில் அக்காலத்து இடையர் நாகரிகத்தோடு பொழுதுபோக்கும்

க. சி. குலரத்தினம்

கலைகளிலும் நல்ல தாடனம்' மாடுகளைக் கட்டியாள்வதிலும் கலைத்துப் பிடிப்பதிலும் தனியாண்மை. பழமலை அந்தாதிப் பாடல்கள் மனனம் செய்யும் பழக்கம்.

பதினெட்டாம் வயதில் படிப்பில் ஆசைகொண்டு நாவலர் காவிய பாடசாலையிற் சேர்ந்து ஊண் உறைவிடம் பெற்றுப் படித்தபோதே சுன்னுகம் குமாரசாமிப்புலவர், நாவலர்வழி கைலாசபிள்ளை ஆகியோரின் உத்தம மாணுக்கன் நான்காண்டுகளில் ஒரே மூச்சிற்படித்து உச்ச விளக்கியாய் உருவானபெருமை. குமாரசுவாமிப்புலவர் 1922-ல் மறையும்வரை பண்டிதர் பரீட்சை எடுக்கப்பயந்து பின்னர் 1926-ல் எடுத்துச் சிறப்புச் சித்திபெற்றுத் தங்கப்பதக்கம் பரிசு பண்டிதரானபின் பயிற்சி பெற்ற ஆசிரியராய் வந்ததும் நாவலர் பாடசாலை அதிபர் பதவி காத்திருந்தது. முகாமையாளரின் மனையிலும் மருகன் உறவு எதிர்பார்த்திருந்தது இப்பால் துறவுநெறி தலையெடுத்தது. சைவாசாரிய கலாசாலை விரிவுரையாளராயிருப்ப வாய்வன்று வரவேற்றது. ஆசிரிய கலாசாலைக்கு அருகில் கொட்டிலமைத்துக் குருகுலக் கல்வியும், காவிய பாடசாலையும் கிளைக்க வழி பிறந்தது.

நாவலர் பாரம்பரியம் இழையோடியது. நூற்றுக் கணக்கான பண்டிதர்களை உருவாக்கிய வேலையில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களும் எழுந்தனர் பண்டிதர்களின் நாயகமணியாய்ப் பண்டிதமணியாய் வாழ்வு மலர்ந்தது நைட்டிகப் பிரமச்சாரிய ஆச்சிரமமும் முற்றிக் காவியணியாத சந்நியாசம் கனிந்தது. இன்று முற்றிமுறுகிப் பழுத்த சைவத்தமிழ்ப்பழம் இனறும் முறுவலுடன் பாடம்சொல்லும் மூதறிவு செயற்படுகிறது.

---

### ஆராய்ச்சிக் கட்டுரை

"திருவாசகமும் கிறிஸ்து சமய உண்மைகளும்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரை அமரர் K E மதியாபரணம் M A அவர்களால் எழுதப்பட்டது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி வகுப்புகளுக்கு சுமார் 20 ஆண்டுகளாக தமிழ் கற்பித்த பேரறிஞர் மதியாபரணம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடுளில் சிறந்த ஆராய்ச்சிக்கட்டுரை வாசித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட திருவாசகம் பற்றிய கட்டுரையின் முன்னுரையே எங்கள் 25 ம் தேதி பிரசுரத்தில் வெளி வந்தது.

அறிஞர் K. E (கே எ. என்று தவருக பிரசுரிக்கப்பட்டுள்ளது) மதியாபரணத்தின் நினைவாக வெளிவர உதவிய உதயதாரகைக்கு எமது நன்றி.

---

## மக்கள் கருத்து

பொலிகண்டி
22-6-85.

ஐயா,

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தமது அன்னை கமலாவில் அளவற்ற பாசம் கொண்டவர் எனவே மகனை ராஜீவ் என்று பெயரிட்டது குறிப்பிடத்தக்கது.

ராஜீவ் (RaJiva) என்ற இந்திச்சொல் நீலத்தாமரையைக் குறிக்கின்றது.

எனவே இந்தியப் பிரதமரின் பெயர் ரஜீவல்ல! ராஜீவ் என்றே கொள்ள வேண்டும், இதனை நீங்கள் ஏற்றுக் கொண்டால் உங்கள் பிரபல பத்திரிகையை அவ்வாறு திருத்திக் கொள்வது நலம்.

வீ. நடராசா
இளைப்பாறிய அதிபர்,
சிதம்பராக்கல்லூரி.

---

### யாருடையது

திரு. க. விஜயகுமார் என்பவர் திரு ச சதிஸ்குமாரினதும், செல்வி ஜெயமாலினி என்பவரினதும் பிறப்புப்பத்திரங்களையும் திரு ஏ விக்னேஸ்வரன் நாலு திறப்புகள் கொண்ட கோர்வையையும், திரு வே. சிவசுப்பிரமணியம் என்பவர் திரு வேலுப்பிள்ளை பாலச்சந்திரன் என்பவருடைய சாரதி லைசென்சையும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளாரகள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# பிறப்புச்சான்றிதழ்களில் மாற்றம் செய்வதாயின் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள்

## சான்றிதழ் பெறுவது பற்றிய விளக்கம்

[நேற்றைய தொடர்ச்சி]

கேள்வி; ஒரே தடவையில் எத்தனை சான்றிதழ்களைப் பெற விண்ணப்பிக்கலாம்?

பதில்; ஒரு விண்ணப்பப் பத்திரத்தின் மீது மூன்று சான்றிதழ்களின் பிரதிகளுக்கு ஒரே தடவையில் விண்ணப்பிக்கலாம்.

கே; பிறப்பு இறப்பு பதிவை இன்னார்தான் சென்று தகவல் கொடுக்கவேண்டுமென்ற ஏதாவது கட்டாயம் உண்டா?

ப: பிறப்பாயின் தகப்பன் அல்லது தாய் அல்லது பிறப்பு நிகழ்கையில் அருகில் இருந்தவர் அதற்கான தகவலை அளிக்கவேண்டும். இறப்பாயின் இறப்பு நிகழ்ந்தபோது அருகில் இருந்தவர் அதற்கான தகவலைக் கொடுக்கவேண்டும்.

கே: பிறந்த அல்லது இறந்த ஒருவருடைய திகதியைச் சரியாகத் தெரியாத நிலையில் சான்றிதழை எவ்வாறு பெறலாம்?

ப: பிறந்த அல்லது இறந்த திகதியோ இடமோ உறுதியாகத் தெரிந்திராவிடின் ஒருவரது பிறப்பு/இறப்பு சான்றிதழைப் பெறுவது கடினமான காரியமாகும் ஏனைய விபரங்களுடன் ஒருவரது பிறந்த இடம் திகதி என்பவற்றின் அடிப்படையில் மூன்றுமாத காலம் பதிவேடுகளின் தேடுதலை இவ் அலுவலகம் கைக்கொள்ளும் எனினும் இவ்வலுவலகம்வழங்கும் தேடுதல் விளைவின் மீது திருப்தியடையாத ஓர் நபர் 20 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி தனிப்பட்ட தேடுதல் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதன் மூலம் தானே தனது பிறப்பு தொடர்பான ஒருவருடகால பதிவேடுகளை மேலதிக மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் நேரடியாகப்பெற்று தேடுதல் நடாத்தி பதிவு விபரங்களைக் கண்டுபிடிக்க முயற்சிக்கலாம்.

கே; விண்ணப்பபத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைகள் இரத்துச் செய்யப்படவேண்டுமா? இல்லையெனில் அவை எவ்வாறு பயன்படுத்தவேண்டும்?

ப: சான்றிதழ் பிரதிக்கான விண்ணப்பங்களில் ஒட்டப்படும் முத்திரைகள் அழிக்கப்படாதவையாகவும் உரியபெறுமதியை உடையனவாகவும் இருத்தல் வேண்டும்.

கே: சான்றிதழுக்கு விண்ணப்பித்து ஏறக்குறைய எவ்வளவு காலத்தில் அதனைப் பெறலாம்?

ப: சான்றிதழ்களை இரண்டு முதல் மூன்றுவார காலத்துள் அஞ்சலில் பெற்றுக்கொள்ளலாம்.

கே; விண்ணப்பப் பத்திரத்தின் மீது சான்றிதழ் கிடைக்காதுவிடில் மேற்கொண்டு என்னசெய்ய வேண்டும்?

ப: விண்ணப்பத்தினை ஒப்படைத்தபின் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு நேரடியாக வருவதன் மூலமாகவோ அல்லது விண்ணப்ப இலக்கத்தையும் திகதியையும் கடிதமூலம் மேலதிக மாவட்ட பதிவாளருக்கு அறிவிப்பதன் வாயிலாகவோ தமது விண்ணப்பம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையினை தெரிந்து கொள்ளலாம்.

கே: அவசர கருமத்திற்காக மிக விரைவில் பிறப்பு, இறப்பு அல்லது திருமணச் சான்றிதழ்கள் பெறவேண்டுமாயின் என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும்?

ப: குறிப்பிட்ட ஒரு முக்கிய அவசர கருமத்தின் நிமித்தம் சான்றிதழொன்று தேவைப்படும்நபர்கள் நேரடியாகமேலதிக மாவட்டப் பதிவாளரை அலுவலக நேரத்தில் கச்சேரியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து அவசர தேவைக்கான காரணத்தை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டி முன்னுரிமை உத்தரவொன்றை அவரது விண்ணப்பப் பற்றுச்சீட்டில் பெற்றுக்கொள்வதன்மூலம் ஒருசில நாட்களுள் தேவையான சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

கே: பிறப்பு, இறப்பு திருமணச் சான்றிதழ்களை முன்கூட்டியே எடுத்துவைத்துக் கொள்ளவேண்டியது அவசியமா?

கைவசம் ஒருசில பிரதிகளை வைத்திருப்பதன்மூலம் அவசர தேவைகள் ஏற்படும்போது இவ்வலுவலகத்தில் சான்றிதழ்களை உடனடியாக பெறுவதற்கேற்படும் நெருக்கடியினையும் தாமதங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

கே: பிறப்புச் சான்றிதழ் பத்திரம் இரண்டு வகையாகக் காணப்படுகிறது. ஒரு பக்கத்தில் மட்டும் உள்ளவை. இரண்டு பக்கங்களிலும் உள்ளவை. இந்த வேறுபாட்டிற்கு காரணம் என்ன?

ப. 31-7-1954 வரையிலான பிறப்பு பதிவுகள் ஒரு பக்க சான்றிதழ் பத்திரங்களில் வழங்கப்படுகின்றன. 1-8-1954க்கு பின்னர் வழங்கப்படும் சான்றிதழ் பத்திரங்கள் இரு பக்கங்களைக்கொண்டவையாகும். இரு பக்கச் சான்றிதழில் தாயினதும் தகப்பனினதும் பிறந்த திகதி, இடம் சாகியம் தகப்பனின் தொழில் தாயின் வயது என்பனவும் பாட்டனின் முழுப் பெயர், பிறந்த வருடம், பிறந்த இடம் என்பனவும், தகப்பன் இலங்கையில் பிறவாதவிடத்து பூட்டனின் முழுப்பெயர் பிறந்த வருடம், பிறந்த இடம், என்பனவும் மேலதிக விபரங்களாகப் பதியப்பட்டுள்ளன. ஒரு பக்கச் சான்றிதழில் இம் மேலதிக விபரங்கள் பதியப்படவில்லை.

கே: என்னென்ன தேவைகட்கு பிறப்பு இறப்புத் திருமணச்சான்றிதழ்கள் தேவைப்படுகின்றன?

பாடசாலை அனுமதி, வேலைவாய்ப்புகள், தேசிய அடையாள அட்டை கடவுச்சீட்டுப் பெறுதல், ஓய்வூதியம், சொத்துரிமை வழக்குகள் போன்றவற்றிற்கு பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் தேவையாகும்

கே: பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய விபரங்கள் என்ன, அதற்கான கட்டணங்கள் என்ன?

ப: பிறப்பு/இறப்பு சான்றிதழைப் பெறுவதற்கு சரியான பிறந்த/இறந்த திகதி பிறந்த/இறந்த இடம் சம்பந்தப்பட்டவரது பெயர், பெற்றோர்களது முழுப்பெயர்கள் என்பவற்றுடன் தெரிந்திருப்பின் பதிவு இலக்கம். திகதியென்பனவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல் பிறப்பு/இறப்பு சான்றிதழை வழங்கும்நடைமுறையை இலகுவாக்கும். பதிவு இலக்கம். திகதி கொண்ட விண்ணப்பத்தின் மீதான சான்றிதழ் ஒன்றினைப் பெறுவதற்கு ரூபா 5/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். பதிவு இலக்கத்தினையும், திகதியையும் குறிப்பிட்டு வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தின் மீதான சான்றிதழை வழங்குதல் அனாவசிய தாமதத்தினை தவிர்க்கவும், சான்றிதழ் பெறுவதை உறுதிப்படுத்தவும் மிகவும் உதவியாக இருக்கும்.

கே: விபரங்கள் சரியாகத் தெரியாவிடத்து சான்றிதழ் ஒன்றை எவ்வாறு பெறலாம். அதற்குரிய கட்டணம் என்ன?

> யாழ். பதிவாளர் காரியாலயத்தில் பிறப்பு, இறப்பு. திருமணப்பதிவு சான்றிதழ்கள் பெறுவது தொடர்பாகவும் அவை பற்றிய சகல விபரங்களை குறிப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள விளக்கத்தினை இங்கே தருகின்றோம்.

ப: பதிவு இலக்கமும் திகதியும் தெரியாதவிடத்து சான்றிதழ் ஒன்றிற்கான விண்ணப்பத்தின்மீது 3 மாத காலம் தேடுதல் நடாத்திச் சான்றிதழையோ பெறுபேற்றையோ வழங்குவதற்கு ரூபா 10/-பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டவிண்ணப்பத்தினைவழங்கவேண்டும் அத்துடன் ரூபா 20/- பெறுமதியான விண்ணப்பத்தின்மீது சம்பந்தப்பட்டவர் பிறந்தஉத்தேசதிகதியிலிருந்து 1 வருட காலத்திற்கான பதிவேடுகளை விண்ணப்பதாரர் தாமே நேரடியாக தேடுதல் செய்வதற்கு வசதிகள் இவ்வலுவலகத்தில் செய்துகொடுக்கப்படும்.

கே. பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுகள் நடைபெற்றவுடன் ஒரு பிரதியை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்க ஏதாவது வழிமுறைகள் உண்டா?

ப: பிறப்பு / இறப்பு, திருமண பதிவுகள் பதியப்பட்டவுடன் ஒரு பதிவுப் பிரதி உடனடியாகக் கட்டணமின்றி குறிப்பிட்ட நிகழ்வினை பதிந்த பதிவாளரினால் வழங்கப்படும் இஃது சட்டரீதியான அரசினால் செய்யப்பட்ட வழிமுறையாகும். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வுரிமையைப் பயன்படுத்திபிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

கே: பிறப்பு. இறப்பு, திருமணச் சான்றிதழ்களைத் தாய் மொழியில்தான் பெறமுடியுமா?

ப: தமிழ் மக்களது பிறப்பு இறப்பு திருமணப் பதிவுகள் வட, கிழ் மாகாணங்களில் தமிழ் மொழியிலேயே பதியப்படுகின்றன எனவே இவற்றிற்கான சான்றிதழ்களும் அம்மொழியிலேயே வழங்கப்படுகின்றன

கே: பிறப்பு. இறப்பு, திருமணச் சான்றிதழ்களை ஆங்கிலத்தில் பெறுவதற்கான வழிமுறைகள் யாது?

ப: ஆங்கில மொழியில் அல்லது சிங்கள மொழியில் பிறப்பு இறப்பு சான்றிதழ்களின் மொழிபெயர்க்கப்பட்ட பிரதிகளைப் பெறுவதற்கு ஒரு பிரதிக்கு ரூபா 4/- பெறுமதியான முத்திரையைஒட்டி விண்ணப்பிப்பதன்மூலம் பெற்றுக் கொள்ளலாம் ஆங்கில சிங்கள மொழிகளில் வழங்கப்பட்ட சான்றிதழ்களையும் இவ்வாறே தமிழ்மொழியில் பெற்றுக் கொள்ளலாம். இச்சேவை பதிவாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட சத்தியப்பிரமாணமெடுத்த மொழிபெயர்ப்பாளர்கள் சேவையிலுள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகங்களில் மாத்திரமே வழங்கப்படுகின்றன

கே: தென்னிலங்கையில் நிகழ்ந்த ஓர் பிறப்பினது, இறப்பினது அல்லதுதிருமணம் ஒன்றினது மூலப் பதிவு ஆங்கிலத்தில் பதியப்பட வசதிகள் உண்டா?

ப: நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி வட, கிழ் மாகாணம் தவிர்ந்த இலங்கையின் ஏனையபகுதிகளில் வாழும் மக்களினதும் அனைத்திலங்கையிலுள்ள சிங்கள மக்களினதும் பதிவுகள் உத்தியோக மொழியான சிங்களத்திலேயே பதியப்படல்வேண்டும். ஆங்கிலத்தில் மூலப்பதினைச் செய்வதற்குச் சட்டம் இடமளிக்கவில்லை.

கே: பிறப்பு இறப்பு, திருமணச் சான்றிதழ்களை மொழிபெயர்ப்புச்செய்ய தகுதியுடையோர் யார்?

ப: பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தில் கடமைபுரியும் தகைமைபெற்ற மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணமெடுத்த மொழிபெயர்ப்பாளரே பிறப்பு இறப்பு திருமணச் சான்றிதழ்களை மொழிபெயர்க்கத் தகுதியுடையவர்.

கே: திருமணப்பதிவு பதிவாளரது இல்லத்தில்தான் நடைபெறவேண்டுமென்ற விதிமுறையுண்டா?

ப: திருமணப்பதிவொன்றினை பதிவாளர் அலுவலகத்திலோ அல்லது விசேட அனுமதிப்பத்திரத்தில் மீது சம்பந்தப்பட்டவர்களது வீட்டிலோ பதிவுசெய்துகொள்ளலாம்.

கே: திருமணப்பதிவாளரை வீட்டிற்கு அழைத்துதிருமணத்தைப் பதிவு செய்வதற்கு கையாளவேண்டியநடைமுறை என்ன?

ப: திருமணப்பதிவாளரை வீட்டிற்கு அழைத்து திருமண பதிவை நிகழ்த்துவதாயின ரூபா 30/- பெறுமதியான முத்திரையொட்டப்பட்டதிருமண இல்லப் பதிவுக்கான அனுமதி விண்ணப்பத்தினை பதிவாளரிடம் கையளித்து அதற்கான அனுமதியை மேலதிகமாவட்ட பதிவாளரிடம் பெறுவதின் வாயிலாக திருமணத்தினை வீட்டில் பதிவுசெய்துகொள்ளலாம்

கே: பதிவு செய்யப்படாத திருமணமொன்றினால்ஏற்படும் விளைவுகள் யாவை?

ப: திருமணமொன்றினைப் பதிவு செய்யாவிடின் அத்தகைய திருமணம் சட்டப்படி செல்லுபடியற்றதாகும் இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் பிறப்புப் பதிவுகளில் தகப்பன் பெயர், மற்றும் தகப்பன் வழியிலான விபரங்கள் பதியப்பட மாட்டாது.

கே: திருமணம் நடந்த எத்தனை நாட்களுள் அது பதியப்பட வேண்டும்?

ப: திருமணம் பதியப்பட்ட நாளே பதிவுத் திகதியாகக் கொள்ளப்படும் திருமணம் நிகழ்ந்த நாளிலிருந்து எவ்வளவு காலத்துள் அஃது பதியப்பட வேண்டுமென்பதற்கான நியதியெதுவுமில்லை

கே. திருமணப் பதிவுச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான நடைமுறை என்ன?

ப: திருமணப் பதிவுச்சான்றிதழ்களைப் பெறுவதாயின் திருமணப் பதிவுத் திகதியையும் பதிவு செய்த பதிவாளர் பெயரையும் அறிவித்தல் வேண்டும். பதிவு தொடர்பாக இத்தகவல்கள் தெரியாவிடின் மூன்றுமாத தேடுதலுக்கும் தனிப்பட்ட தேடுதலுக்கும் மேற்குறிப்பிட்ட நடைமுறையே கைக்கொள்ளப்படல் வேண்டும்.

கே: பொதுவாக ஒரு திருமணத்தைப் பதிவு செய்து கொள்வதற்கு கைக்கொள்ள வேண்டிய நடைமுறை என்ன?

ப: (அ) திருமணம் ஒன்றினை பதிவு செய்வதற்குக் குறிப்பிட்ட இருபாலாரும் 14 நாட்களுக்கு முன்னர் திருமண அறிவித்தல் ஒன்றினை தாம் வதியும் பிரிவுப் பதிவாளரிடமோ அவர் வசிக்கும் மாவட்டத்தின் மேலதிக மாவட்ட பதிவாளரிடமோ கையளித்தல் வேண்டும்.

(ஆ) இருபாலர்களில் இருவரும் வெவ்வேறு திருமணப் பிரிவுகளை சேர்ந்தவர்களாயின் தனித்தனி அவ்வவ் உள்ளூர் பதிவாளர்களுக்கு திருமண அறிவித்தல்களை கையளித்தல் வேண்டும்.

(இ) நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு கடந்த பின்னர் தாம் விவாக அறிவித்தல் கொடுத்த பதிவாளரிடம் விவாகச்சான்றிதழ்களை பெற்றுத் திருமணத்தினை பதிவிக்கலாம். இரு பிரிவுகளின் விவாக அறிவித்தல் கொடுத்தவர்கள் விவாகத்தினை பதிவு செய்யவுள்ள பதிவாளரிடம் விவாக அறிவித்தல் பிரதியைப் பெற்று அதனை விவாக அறிவித்தல் கொடுத்த மற்றப் பதிவாளரிடம் கையளித்து அவரிடமிருந்து அங்கு கையளிக்கப்பட்ட விவாக அறிவித்தலின் பிரதியும் பதிவாளர் சான்றிதழ்களையும் பெற்று மீளாய்வு திருமணத்தினைபதிவு செய்ய உத்தேசித்துள்ள பதிவாளரிடம் கையளிப்பதன் மூலம் திருமணத்தினை பதிவு செய்து கொள்ளலாம்

கே: உடனடியாக திருமணம் ஒன்றினை பதிவு செய்ய வேண்டிய அவசியமேற்பட்டால் கைக்கொள்ளவேண்டிய நடவடிக்கை என்ன?

ப: உடனடியாக திருமணம் ஒன்றினைப் பதிவு செய்யவேண்டிய அவசியம் ஏற்படின் விசேட திருமணப்பதிவு அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து ரூபா 30/-க்கான அஞ்சல்பணக் கட்டளையுடன் உள்ளூர் பதிவாளரிடம் கையளிப்பதன் மூலம் விசேட அனுமதிப்பத்திரம் பெற்று அத்திருமணத்தை பதிவு செய்விக்கலாம். மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் விசேட திருமணப் பதிவு அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிப்போர் அஞ்சல் பணக்கட்டளைக்குப் பதிலாக 30/ பெறுமதியான முத்திரைகளொட்டி விண்ணப்பித்து விசேட திருமணப்பதிவு அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

கே: ஒரு திருமண அறிவித்தல் எவ்வளவு காலத்துக்குச் செல்லுபடியாகும்?

ப: ஒரு திருமண அறிவித்தல் 3 மாதகாலத்திற்கு மட்டுமே செல்லுபடியானதாயிருக்கும்.

கே: மணமகனோ மணமகளோ இலங்கைக்குவர முடியாத சூழ்நிலையில் அல்லது வேறு காரணங்களால் நேரடியாகசமூகமளிக்கமுடியாவிடின் அத்தகையவர்களது திருமணத்தை எவ்வாறு பதிவு செய்யலாம்?

ப: இரு திறத்தவர்களும் (மணமகனும் மணமகளும் இரு சாட்சிக்காரர்களும் நேரடியாகப் பதிவாளர் முன்னிலையில் சமூகமளிக்காதவிடத்து ஓர் திருமணம் எதிர்காரணத்தை

[6ம் பக்கம் பார்க்க]

# பிறப்புச் சான்றிதழ்களில்.....

[5ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டும் பதிவு செய்யப் படமாட்டாது.

ப: திருமணம் செய்யாமைபற்றிப் சான்றிதழைப் பெறுவது எங்ஙனம்?

ப: திருமணம் செய்யாமை பற்றிய எத்தகைய சான்றிதழும் இவ்வலுவலகத்திளுல் வழங்கப்படமாட்டாது. இத்தகைய சான்றிதழை வழங்க எவருக்கும் சட்டரீதியான அதிகாரம் வழங்கப்படவில்லை.

கே: திருமணம் செய்வதற்கு தகமை பெறும் வயதெல்லை என்ன?

ப: (அ) 21 வயது பூர்த்தியான ஆண் பெண் இருபாலரும் பெற்ருேரது சம்மதம்இன்றி தத்தமது சுயவிருப்பின் அடிப்படையில் திருமணத்தைப் பதிவு செய்து கொள்ள உரிமையுடையவர்களாவர்

(ஆ) 12 வயதிற்கு மேற்பட்ட பெண்களும், 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் பொதுத் திருமணமொன்றினை பெற்ருேரின் சம்மதத்துடன் செய்து கொள்ளலாம்.

கே: திருமணமொன்றை மதிவு செய்வதற்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் என்ன?

பதில்:

## திருமணப் பதிவுக் கட்டணங்கள்

திருமணப் பதிவு அறிவித்தல் (உள்ளூர் பதிவாளரிடம்) ரூபா 150/- (மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் -ரூபா 11/- முத்திரை கல்யாண அறிவித்தலின் பிரதியை வழங்குவதற்கு- ரூபா 5/- முத்திரை பதிவாளர் கட்டணம் (உள்ளூர் பதிவாளரின் பதிவு அலுவலகத்தில்) -ரூபா 1/50 பதிவாளர் (மேலதிக -மா. ப. அலுவகத்தில்) -ரூபா 1/50 முத்திரை, பதிவாளர் (உள்ளூர் பதிவாளரிளுல் இல்லங்களில் செய்யப்படும் பதிவுகளுக்கு -ரூபா 20/-, பதிவாளர் (மே. பா. பதிவாளரிளுல் இல்லங்களில் செய்யப்படும் பதிவுகளுக்கு -ரூபா 50/- (முத்திரை).

கே:- பிறப்புச் சான்றிதழ்களில் பெயர் மாற்றம் செய்வதாயின் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையென்ன?

ப:- பிறடபுச் சான்றிதழில் பெயரிடுதல், அல்லது பெயர் மாற்றம் செய்வதாயின் அதற்கான இத்திணைக்களத்தில் உள்ள பி. இ. சட்டத்தின் 27ம் வெளிப்படுத்துகைப் படிவத்தினைப் பூர்த்தி செய்து குறிப்பிட்ட நபர் மாற்றக்கோரும் புதிய பெயரினைப் போதுமான அளவு காலம் நடைமுறையில் உபயோகித்தமையினை உறுதிப்படுத்துமுகமாக கல்விபயின்ற பாடசாலையிலிருந்து பெற்ற மாணவர் பதிவேடு, கல்விச் சான்றிதழ்கள், சான்றுபடுத்தப்பட்ட குடியிருப்பாளர் அட்டவணையின் பிரதி, உணவு முத்திரை வாக்காளர் தேருநர் அட்டையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி, சாதகக்குறிப்பு தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம், உறுதி போன்ற ஆவணங்களையும் திருத்தம் செய்யப்படவேண்டிய பிறப்புச் சான்றிதழ் பிரதியையும் கையளித்தல் வேண்டும்.

கே: பிறப்புச் சான்றிதழில் தகப்பன் அல்லது பூட்டனின் பெயர் அவரது பிறந்த திகதி இடம் தொழில் போன்றவற்றில் மாற்றம் செய்யவேண்டுமாயின் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறை என்ன?

ப: பிறப்புச் சான்றிதழில் தகப்பன் பெயர், பாட்டனின பெயர் அல்லது அத்துடன் இவர்களது பிறந்த திகதி பிறந்தஇடம், தொழில் போன்றவற்றில் பிழைகள் ஏற்பட்டிருப்பின் அல்லது விடுபாடுகள் ஏற்பட்டிருப்பின் பிறப்பு இறப்புகள் சட்டத்தின் 27 ''அ' பிரிவின் கீழான வெளிப்படுத்துகைப் படிவத்தினைப் பூர்த்தி செய்து மேற்குறிப்பிட்ட அதே மாதிரியான ஆவணங்களுடன் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

கே: தாயினது பெயர், பிறந்த திகதி, இடம், வயது போன்றவற்றில் திருத்தங்கள் செய்யவேண்டுமாயின் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறை என்ன!

ப; தாயின் பெயர் அல்லது அத்துடன் பிறந்த திகதி, பிறந்த இடம் வயது போன்றவற்றில் திருத்தங்கள்/சேர்க்கைகள் செய்யவேண்டுமாயின் 52 1) ம் பிரிவின் கீழ் மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் அதற்கான வெளிப்படுத்துகைப் படிவத்தினைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

கே: உரிய காலத்தில் பதிவு செய்யப்படாத பிறப்புப் பதிவொன்றைப் பதிய என்ன நடைமுறையினைக் கையாள வேண்டும்?

ப; பிறப்பு ஒன்று பதிவு செய்யப்படாது விட்டிருப்பின் காலம் கடந்த அதனைப் பதிவு செய்வதற்கு குறிப்பிட்ட நபர், பிறந்த மருத்துவ மனையிலிருந்து பெறப்பட்ட அவரதுபிறப்பினைச் சான்று படுத்தும் கடிதம்' சாதகம் அல்லது ஞானஸ்நானச்சான்றிதழ் மற்றும் இவரது பிறந்த திகதி உறுதிப்படுத்தத்தக்க ஆவணங்களாகக் குடியிருப்பாளர் அட்டவணையில் சான்றுபடுத்தப்பட்ட பிரதி. பெற்ருேரின் விவாகச் சான்றிதழ் பெற்ருேரினதும் இவருக்கு நேர்மூத்த சகோதர சகோதரிகளினதும் பிறப்புச் சான்றிதழ்கள், கல்வி பயின்ற பாடசாலையின் சேர்வுடாப்பின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி, வாக்காளர் தேருநர் அட்டவணையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி தேசிய அடையாள அட்டை, கடவுட்சீட்டுப் போன்ற ஆவணங்களுடன் 24ம் பிரிவின் கீழான வெளிப்படுத்துகை ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கே: உரிய காலத்தில் பதியப்படாத இறப்பொன்றைப் பதிவு செய்வதற்குஎன்ன நடைமுறையினைக் கையாளவேண்டும்?

ப; காலங் கடந்த இறப்பொன்றைப் பதிவதாயின் 3ம் பிரிவின் கீழான வெளிப்படுத்துகைப் படிவத்தினைப் பூர்த்தி செய்து குறிப்பிட்ட திகதியில் சம்பந்தப்பட்ட பெயருடைய நபர் இறந்தமையினை உறுதிப்படுத்தத்தக்க ஆவணங்களான இறந்த வைத்தியசாலையிலிருந்து பெறப்பட்ட கடிதம், கிராமசேவையாளரின் அறிக்கை, மரண அறிவித்தல் பிரசுரங்களின் பிரதிகள், குறிப்பிட்டநபர் குறிப்பிட்ட காலத்தில் இறந்தமையினை அவரது வேலைகொள்வோருக்கு அறிவித்தமைக்கான அத்தாட்சிப் படுத்தப்பட்ட கடிதங்கள் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கே. பிறப்புப்பதிவொன்றில் ஆணைப் பெண்ணாகவோ பெண்ணை ஆணாகவோ பிழையாகப் பதிந்திருந்தால் அதனைத் திருத்துவது எங்கனம்?

ப. பிறப்புச் சான்றிதழ் பதிவில் பெண் அல்லதுஆண் பால் தொடர்பான பதிவில் தவறு நிகழ்ந்திருப்பின் அதற்கான வெளிப்படுத்துகையினை பூர்த்தி செய்து குறிப்பிட்ட நபர் பிறந்த மருத்துவ மனையிலிருந்து பெற்ற சான்றுப் படுத்தப்பட்ட கடிதத்துடன் அவரதுசாதகம் அல்லது ஞானதான சான்றிதழ்.கல்விபயின்ற பாடசாலையிலிருந்து பெறப்பட்ட கடிதம் போன்றவற்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கே: தனது அல்லது தாய் தகப்பன் பெயர் மாற்றங்கள் தொடர்பாக அல்லது கடந்த கால இறப்பு பிறப்புப் பதிவு தொடர்பாக விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்ட பின் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

ப: பெயர் மாற்றம் - தாய் அல்லது தகப்பன் பெயர் அல்லது மற்றைய விபரங்கள் தொடர்பான திருத்தங்கள் அல்லது சேர்க்கைகள், பால் மாற்றத்திருத்தம், கடந்தகால பிறப்பு/இறப்பு பதிவுகள் இவற்றிற்கான வெளிப்படுத்துகைகள் கிடைக்கப்பெற்றதும் சம்பந்தப்பட்ட பதிவை. திருத்தத்தை அல்லது சேர்க்கையினை உறுதப்படுத்தும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவையாகவும் போதுமானவையாகவும் இருப்பின் மேலதிக மாவட்டப்பதிவாளரிளுல் நடத்தப்படும் ஒரு விசாரணைக்கு வெளிப்படுத்துநர் சமூகந்தருதல்வேண்டும். கிராம சேவை அலுவலர், பிறப்பு இறப்பு சம்பவித்த வைத்தியசாலையின் பிரதிநிதி, பாடசாலை அதிபர் மற்றும் வெளிப்படுத்துகையினை உறுதிப்படுத்தத்தக்க சமூகத்தில் அந்தஸ்துள்ள இருவர் ஆகியோர் விசாரணைக்கு வெள்ப்படுத்துநருடன் சமூகந்தரவேண்டும் பெயர் மாற்றம் தவிர்ந்த ஏனைய வகையிலான வெளிப்படுத்துகைகள் பதிவாளர் நாயகத்தினுலேயே அங்கீகரிக்கப்படல் வேண்டும். விசாரணையின் போது திட்டவட்டமாக பிறந்த திகதியை உறுதிப்படுத்த இயலாத காலம்கடந்த விண்ணப்பதாரருக்கு உத்தேச பிறந்த வயது (வருட)ச் சான்றிதழ் வழங்கப்படும்.

கே: திருமணப்பதிவில் செய்யப்பட்டுள்ள பிழைகளை நீக்குவதற்கும் சாகியத்தை மாற்றுவதற்கும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

ப: திருமணபதிவில் ஏற்படும் பிழைகளைத் திருத்துவதற்கும், சாகியம் சம்பந்தப்பட்ட பதிவில் திருத்தம் செய்வதற்கும் இத்திணைக்களத்திற்கு அதிகாரம் கிடையாதாகையால் அவற்றினை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வதன் மூலம் நிவாரணம் பெறலாம்.

(மிகுதி நாளை தொடரும்)

# யாழ். அபிவிருத்திச் சபை அறிவித்தல்

1985 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி காலை 10 00 மணிவரை யாழ் அபிவிருத்திச் சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம். வேலைப் பகுதி) அவர்களால் கீழ காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்களில் கீழ் காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10-10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும் கிரயப்பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ். அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1985 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

| | யாழ். அபிவிருத்திசபை உப அலுவலகங்கள் | வேலையின் பெயர் | ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப் பட்டதொகை [தகமை] | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஊர்காவற்றுறை | சந்தைக்கட்டிடம் அமைத்தல் 5 ஆம் பகுதி | 225,000/- | 150/- | 50/- |
| 2. | கைதடி | சந்தைக்கட்டிடம் அமைத்தல் | 100,000/- | 100/- | 25/- |
| 3. | மல்லாகம் | மல்லாகம் உப அலுவலகம் அமைத்தல் | 100,000/- | 100/- | 25/- |
| 4. | அராலி | அராலி உப அலுவலகம் அமைத்தல் | 100,000/- | 100/- | 25/- |
| 5. | கொக்குவில் | நூல்நிலையம் அமைத்தல் | 125,000/- | 125/- | 25/- |
| 6. | கொக்குவில் | ஆடியபாதம் சந்தை அமைத்தல் | 40,000/- | 50/- | 25/- |
| 7. | நல்லூர் | நல்லூர் உபஅலுவலகம் அமைத்தல் | 250,000/- | 200/- | 50/- |

ஒப்பம்:- அன்ரன் அல்பிரட்
பிரதிச்செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலை)
யாழ். அபிவிருத்திச் சபை.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கண்டி வீதி. யாழ்ப்பாணம்.
24 - 06 - 1985

4016

## பிரஜைகள் குழுக்களின் அவசியம்

(கல்வியங்காடு)

''அரசியல் ஸ்தாபனங்கள். சிவில்நிர்வாகங்கள் செயலிளந்து இருப்பதால் மக்களின் அத்தியவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலே தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் குறிப்பாக கிராம மட்டத்தில் சமாதானத்தைப் பேணும் பிரஜைகள் குழுக்கள் தெரிவு செய்யப்படுவது அவசியம்'' இவ்வாறு இளவாலை புனித அன்னம்மாள் கோவில்பற்று பிரஜைகள்குழு தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. சி. இறேகோரி தெரிவித்தார்.

இணைச் செயலாளர்களாக திருவாளர்கள் ஜி எஸ்- அந்தோனிப்பிள்ளை, எஸ். யேசுரெட்ணமும், பொருளாளராக எஸ். அந்தோனிப்பிள்ளையும், ஏழு பேர் கொண்டநிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

## புதிய அதிபர்கள்

(கல்வியங்காடு)

யாழ். கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராகவிருந்த திரு. எஸ். இராமலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.


யாழ். கனகரெத்தினம் ம. ம. வித்தியாலயத்தில் அதிபராக இருந்த திரு. எஸ். வி. ஆறுமுகம் சேவையினின்றும் ஓய்வு பெறுகிறார்

(கல்வியங்காடு)

யாழ் ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு கே. பாலசிங்கம் இம் மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் யாழ். கனகரெத்தினம் ம ம வித்தியாலய உப அதிபராக கடமையாற்றி வந்தவராவார்.

## ஓய்வு பெறுகிறார்



யாழ் மக்கள்வங்கி பிரதான வீதிக்கிளையைச் சேர்ந்த திரு. சி பயில்வாகனம் இம்மாதம் 30ம் திகதி தமது 33 வருட வங்கிச்சேவையிருந்து ஓய்வு பெறுகிறார் இவர் 1947ல் யாழ் கூட்டுறவு மாகாண வங்கியில் தமது வங்கிச் சேவையை ஆரம்பித்தார். 1971ல் கூட்டுறவு மாகாண வங்கி மக்கள் வங்கியியால் பொறுப் பேற்றதைத் தொடர்ந்து அதே கிளையில் தொடர்ந்து ஓய்வு பெறும்வரை கடமையாற்றி வந்தார். தனது கடமையில் கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்து வந்ததிளுல் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளரின் நன்மதிப்பைப் பெற்ருர். குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவர் செய்த சேவை அளப்பரியது. வங்கி அதிகாரிகளின் நன்மதிப்பைப் மெற்ற இவர் 38 வருட வங்கிச் சேவையில் இருந்து ஓய்வுபெறுவதையிட்டு யாழ். மக்கள்வங்கி, பிரதான வீதிக்கிளை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் இவருக்கு பொன்னுடை போர்த்தி பிரியாவிடை அளிக்கவுள்ளனர்.

## மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்காஅச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)
**Lady in Trouble**
தினசரி 3 காட்சிகள்
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30, 4-30 p. m.
**Heaven's Gate**
(color)
(சொர்க்கவாசல்)
கண்டிப்பாக 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும்

## பவித்ரா மினி
கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்துக் கல்லூரியடி)
4' திரைவானில்
10-30, 2-30, 4-30
**DEMENTED**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## குமரன் மினி
சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30, 4-30
QUEEN OF EMMANUEL
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

AM. 9-00, 12-30
**LINDA**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## நியூசாந்தி (மினி)
(யாழ். சாந்தி சினிமாவில்)
26 — 28
கமல், ஸ்ரீபிரியா, நம்பியார், சுருளி மற்றும் முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
**நீயா?**
சாந்தி வெண்திரையில் முன்னர் ஓடி வசூல் சாதனை புரிந்த படம்

## S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காலை 10-30 காட்சி மட்டும்
எம் ஜி ஆர், சரோஜாதேவி நம்பியார் நடித்த
**படகோட்டி**

காலை 9-00, 1-00, 2-30, 4-30 p m
**Mari G Curse**
(யப்பானில் படமாக்கப்பட்டது)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

## வெலிங்டன்
10-30 — 2-15 — 4-15
PIRANHA II
**Flying Killers**
வந்தவர்களுக்கு மட்டும்

## லிடோ சினிமா
10-30 — 2-30
பாண்டியன் — ரேவதி நடித்த
**'புதுமைப் பெண்'**
(ஈஸ்ட்மன் கலர்)


## இடமாற்றம்

எமது ஸ்தாபனமாகிய ஏ பவர் அன் கொம்பனி இல. 5, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணத்திலிருந்து இல. 51, அம்மன்வீதி, யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. தொலைபேசி இல. 24318. இதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

மனேஜர்
ஏ பவர் அன் கொம்பனி

4044

## வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவர் பொதுக்கூட்டம்

வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவரின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 28-6-85 வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும், பழைய மாணவர் அனைவரும் தவருது சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.
(4054)

## 45-ந் நாள் நினைவஞ்சலி
### சின்னையா சிவதாசன்
(புகையிரத நிலைய சாரதி அனுராதபுரம்)



ஆண்டவன் படைப்பு
05-03-1933

அரக்கனின் பறிப்பு
14-05-1985

ஓர் கனியாய் அன்றுதித்த எம் செல்வமே கண்மூடி முழிக்க முன்னம் துடிதுடித்து மறைந்தீரோ, கொடிய அரக்கர்கள் கொன்று குவித்தனரே! உங்கள் ஒருயிர் போன சோகம் ஓராயிரம் உயிரிழப்பு.

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டும் அனுதாபம் தெரிவித்தும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த யாழ். அரசாங்க அதிபருக்கும், வட பிராந்திய போக்குவரத்து சபை தலைவருக்கும், சாலைஅதிபருக்கும், மற்றும் சாரதி, காப்பாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.
ஏழாலை வடக்கு, ஏழாலை.

4048


## லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3-00, 5-45
விஜயகாந்த் (இருவேடங்களில்) ஜோதி
**ராமன் ஸ்ரீ ராமன்**

## தேவிமினி
சினிமா
(வின்ஸர் அருகாமை)
23-6-85
10-30, 2-15, 4-15 p. m.
**EROTICA**
கண்டிப்பாக வயது வந்தவர்க்கு மட்டும்


## ஸ்ரான்லி மினி 'A'
10-30, 12-30,
ரவீந்தர், விஜி, அனுராதா நடித்த
**குற்றவாளிகள்**

## ஸ்ரான்லி மினி 'B'
10-15, 12 15, 2-15 4-15
**Emmanuel With Slave Trade**
புதிய வெளியீடு
கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்

## கங்கா மினி
நாச்சிமார் கோவிலடி
27-6-85 முதல்
தினசரி பி. ப 2-30
மாலை 4;45
Richard Burton, Roger Moore, Richard Harris in
**The Wild Geese**
(War Film-Color)
பயங்கரத் துப்பாக்கித் தாக்குதல்கள் நிறைந்த நெஞ்சத்தை நடுங்கவைக்கும் சம்பவங்களடங்கிய திகிலூட்டும் படம்

## உஷா மினி சினிமா
(கே. கே எஸ் வீதியில் முட்டாஸ் கடை சந்திக்கும், கடைப்பிள்ளையார் கோவிலுக்கும் மத்தியில்)
27-6-85 வியாழன் முதல் ஆரம்பம்
அன்று 10-30 மணிக் காட்சி மட்டும்
**"ஸ்ரீ காஞ்சி காமாட்சி"**
திரைப்படம் காண்பிக்கப்படும்.
(4019) 28 முதல் FIST OF FURY III


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
### சுப்பிரமணியம் அபேதானந்தன்
(யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்)



அன்னை மடியில்:
10-7-1949

ஆண்டவன் பாதத்தில்:
7-7-1984

திதி:
27-6-1985

சின்னத்தம்பி! சின்னத்தம்பி! என்று கூப்பிடும் எம்மைப் பிரிந்து நீ எங்கு சென்ருய் சின்னத்தம்பி!

பிரிவால் வருந்தும்
பெற்ருேர், சகோதரர்கள், மைத்துனர்,
மருமக்கள்:
கஜந்தினி, கிருஷாந்தினி, றஜனி
ஓம்: தத்சத்: சாந்தி! சாந்தி!

திருநெல்வேலி வடக்கு,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

4029

## 45வது நாள் நினைவஞ்சலி
திரு.
### கார்த்திகேசு ராஜதுரை
(அருமை)
(றெயில்வே என்ஜின் சாரதி, அநுராதபுரம்)



மலர்வு: 19-05-1936
அகால மறைவு:
14 05-1985


எங்கள் அன்புத் தெய்வமே, நீங்கள் எங்களைப் பிரிந்து இன்று 45 நாள் ஆகிறது உங்கள் பிரிவால் நாங்கள் துன்பக் கடலில் தத்தளிக்கின்ருேம். எங்கள் துன்பம் என்றும் நீங்காது. உங்கள் ஆன்ம சாந்திக்கு ஆண்டவனை வேண்டுகிருேம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மறவா
பெற்ருேர், மனைவி, மகள்மார், மகன், மாமன், மாமி, மச்சான்மார், மச்சாள்மார், சகோதரர்கள், உற்ருர், உறவினர்கள்.

கடவைப்புலம், சுன்னுகம்.

4043

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பொன்னம்மா சந்திரசேகரர்

தோற்றம்: 02-02-1902
மறைவு: 28-05-1985

அன்னையே எமையீன்ற அன்புத் தெய்வமே
அருந்தந்தை நாற்பதாம ஆண்டுவின் சென்றிடப்
பின்னை நீ தந்தையின் கடமையும் ஏற்றனை
பிரியமுறு மூத்தநல் தனயனோடு புத்திரிகள்
கல்விசீர் சிறப்புறக் கடமையில் நின்றனை
கனிவுநிறை நின்னால் உறவினர் வளர்ந்தனர்
வல்லமை யாகநாற் பத்தைந் தாண்டுகள்
வையமேல் தனித்துநின் றுயர்வுகள் தந்தனை
மாயப் பிறப்பிதில் மேன்மையை அடைந்திட
மனதில்மா சின்றியே நாளும் தவருமல்
காயத் திரிதன்னை ஓதுபகா லட்சுமி
கருணைமிகு கடவுளின் கழலடி சேர்ந்தனை
உன்னருள் பெற்றவர் யார்மறுத் தாலும்
அன்னையே நின்பணி அரனடி சமர்ப்பணம்
புண்ணிய வதியே பரனடி அடைந்தும்
எம்மனை விளக்காய் ஒளி தருவாயே!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
"ஓர்ச்சட்", கைதடி.

4033

## மூதூர் தொகுதியில்

# 11 அகதிகள் முகாம்களில் 9576 தமிழர்கள்

[திருகோணமலை]

மூதூர்த் தொகுதியில் மட்டும் இப்பொழுது 11 அகதி முகாம்களில் 9576 தமிழர்கள் அகதிகளாக உள்ளனர்.

சம்பூர் மகாவித்தியாலயத்தில் மட்டும் 2700 தமிழர்கள் உள்ளனர் ஏனைய அகதிமுகாம் விபரம் வருமாறு:

சேனையூர் மகாவித்தியாலயம்: 1705, கட்டைபறிச்சான் விபுலானந்த வித்தியாலயம்: 2450, கடற்கரைச் சேனைப் பாடசாலை: 259, மூதூர் மகா வித்தியாலயம்: 739, இறால் குழி அரசினர்பாடசாலை: 266, தோப்பூர் மகாவித்தியாலயம்: 366. தோப்பூர் பெண்கள்பாடசாலை: 437, நல்லூர் அரசினர் பாடசாலை: 214, ஆலங்கேணி மகாவித்தியாலயம்: 280, ஈச் சந்தீவு பாடசாலை: 160.

திருகோணமலைத் தொகுதியில் நிலாவெளிக் கிராமத்தில் புதிதாக அகதி முகாம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

## தீக்காயங்களுடன் நாயுடம்மாவின் மனைவி

(புதுடில்லி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அத்திலாந்திக் சமுத்திரத்தில் வெடித்துச் சிதறிய இந்திய விமானத்தில் பயணஞ் செய்து உயிர் நீத்தவர்களில் ஒருவரான இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியான நாயுடம்மாவின் மனைவி திருமதி பவனம்மா தீக்காயங்களுடன் தமிழ்நாடு மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் எப்படி எரிகாயங்களுக்குள்ளானார் என்பது தெரியாதிருக்கிறதாம்.

திருமதி பவனம்மாவை தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே சென்று பார்வையிட்டார்.

விஞ்ஞானி நாயுடம்மா ஒரு பெண் எனத் தவறாக டில்லி வானொலி முதலில் தெரிவித்தது. பின்னர் திருத்திக்கொண்டது.

## திருமலையில் சனநடமாட்டம் இல்லை

(திருகோணமலை)

திருகோணமலைப் பட்டினத்தில் இருந்துவந்த இரவு நேர ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபின்னரும், இரவு நேரங்களில் சனநடமாட்டம் அதிகரிக்கவில்லை, தியேட்டர்களில் இரண்டாம் படக்காட்சி ஆரம்பிக்கப்படவில்லை.

## மரண அறிவித்தல்

### ம. ஞானயோகம் பொன்னையா மயில்வாகனம்

(ஈராக்கில் அகால மரணமானார்)

இளவாலையைச் சேர்ந்த ஞானயோகம் பொன்னையா மயில்வாகனம் (அங்கிள்) ஈராக்கில் அகாலமரணமானார். இவர் Sri M. P. மயில்வாகனம் திருமதி சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மகனும் அங்கையற்கன்னி (சாந்தி)யின் அன்புக் கணவரும் சீதாவின் அன்புத் தந்தையும், ராஜா (சித்திவிநாயகர் ஸ்ரோஸ் ஸ்ரான்லி றோட்), ஜெயக்குமார் (கனடா), ராஜராஜேஸ்வரன் (சென் அன்ரனீஸ் என்றபிறைஸ் கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், காலம் சென்ற Dr. அமரசிங்கம் பொன்னையாவின் மருமகனும் S. P. அமரசிங்கம், Dr. U. P. அமரசிங்கம், திருமதி ப. ஆறுமுகம் (இளைப்பாறிய யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபரும்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார் அன்னாரின் ஈமைக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ராஜா
[சித்தி விநாயகர் ஸ்ரோஸ்]

4062

## மரண அறிவித்தல்

### கு. நடராசா



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 125 சிவன்கோயில் வடக்கு வீதியில் உள்ள S R S. கட்டிடத்தில் நீண்டகாலம் வசித்து வந்தவருமாகிய ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் குட்டித்தம்பி நடராசா 26 6-1985 அதிகாலை காலமானார். இறுதிக் கிரியை 27-6-85 (இன்று) வியாழன் பகல் 12மணி அளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இதனை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும்படி வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

உடன் குடியிருப்பாளர்களும், நண்பர்களும்.

4056

## ரூபா 3 லட்சம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வண பிதா சிங்கராயர் தொடர்ந்து சாட்சியமளித்ததாவது:- "இன்பம், செல்வம் ஆகியோர் பொலிஸாரினால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என நம்புகிறேன்.

இன்ஸ்பெக்டர் கலகே இவர்கள் குறித்து கூறிய விதத்தில் இருந்து இந்த இரு கொலைகளும் பொலிஸாரினால் செய்யப்பட்டன என்று உறுதி செய்துகொண்டேன்.

"1971-ம் ஆண்டு எமது சொந்த மதகுருமாரை எமது கைகளினாலேயே கொலை செய்தோம். உங்களையும் அதுபோலவே செய்யத் தயங்கமாட்டோம்" என்று இன்ஸ்பெக்டர் கலகே அல்லது விஜயதிலக்கா என்னைப் பார்த்துக் கூறினார்.

வான் ஒன்றில் பீச் றோட் வழியாக வந்துகொண்டிருந்தபோதே இவ்வாறு கூறினார்கள் எனக்கும் அக்கதி நேரலாம் என அழ ஆரம்பித்தேன்.

தொடர்ந்து அவர்களுக்கு ஒத்துழைப்பதாகக் கூறினேன். பின்னர் அவர்கள் இராணுவ முகாமுக்கு திரும்பி வந்தனர். தேவையில்லாது அவர்கள்கைகளால் இறப்பதைவிட அவர்களுக்குக் கீழ்ப்படிவதே மேல் என நினைத்தேன்.

ஹில்ட்டன் பெரேரா அவருக்கு ஒரு சந்தர்ப்பமளிப்போம் என்று தெரிவித்தார்.

ரசீதுகளைப் பரிசீலித்துவிட்டு இந்தப்பணம் எங்கிருந்து வந்தது என்று பல்லைக் கடித்தபடி ஹில்ட்டன் பெரேரா என்னைப் பார்த்துக் கேட்டார்.

மத்தியகிழக்கில் வேலைசெய்யும் இளைஞர்களிடமிருந்து கிடைத்ததாகக் கூறினேன் அப்போது அங்கிருந்தோர் பலமாகச் சத்தினர்.

இந்தக்கட்டுக்கதையை நாம் நம்பவேண்டுமா? என்று ஹில்ட்டன் பெரேரா கேட்ட பிறகு அங்கிருந்த உத்தியோகத்தர்களை வெளியே போகும்படி கூறிவிட்டு கதவை மூடினார்.

பிறகு மெதுவான குரலில் எமக்கு மூன்றுலட்சம் தந்தால் இந்த விடயத்தைக் கைவிடுவோம். நான் கிறிஸ்தவன் என்ற வகையில் உங்களுக்கு உதவ விரும்புகிறேன். உங்கள் கருத்து என்ன? என்றார்"

நீதியரசர்: "அவர் பணம் கேட்டதிலிருந்து நீங்கள் எதை விளங்கிக்கொண்டீர்கள்?"

வண பிதா: "அவர் லஞ்சம் கேட்டதாக நினைக்கிறேன்."

வண பிதா தொடர்ந்து கூறியதாவது; "பணம் தந்தால் காப்பாற்றப்படுவீர்கள் என்று அவர் மீணடும், மீண்டும் கெஞ்சினார். யாருடனாவது தொடர்பு கொண்டு பணத்தைப்பெற தொலைபேசியை உபயோகிக்கலாமென்றும் கூறினார். அப்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றேன்.

நீதியரசர்: எவ்வளவு நேரம் இது நடந்தது?"

வண பிதா: "பத்து நிமிட நேரம் வரை."

வண பிதா தொடர்ந்து கூறியதாவது; ஹில்ட்டன் பெரேரா கதவைத் திறந்தார். உத்தியோகத்தர்கள் உள்ளே வந்தனர்.

"இவருக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தேன்; ஒத்துழைக்கவில்லை. எனவே இவருக்குத் தகுந்த சிகிச்சையளிப்போம்" என்று காலகே பேச ஆரம்பித்தார்

இங்கு இருக்க விருப்பமில்லையானால் ஆனையிறவுக்குக் கொண்டு செல்லப்படுவீர்கள் என்றுஎன்னிடம்கூறப்பட்டது.

கைதானவர்களுக்கு மோசமான சித்திரவதைகள் ஆனையிறவில்தான் நடக்குமென்பதை அறிந்தேன். 1979ம் ஆண்டு ஈழவேந்தன் கச்சேரி ராணுவமுகமில் தாம் எவ்வாறு நடத்தப்பட்டார் என்பதை என்னிடம் கூறினார்.

## ஒரே இரவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம் ரூபா பெறுமதியான 350 பவுண் நகைகளும் ஒன்றரை லட்சம் ரூபா காசோலைகளும், யாழ். கஸ்தூரியார் வீதியைச்சேர்ந்த மாசிலாமணி ஆபரண மாளிகையில் 5 லட்சம் ரூபா பெறுமதியான 250 பவுண் நகைகளும் வெள்ளி சாமான்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கல்வியங்காட்டிலுள்ள என். வி. கந்தையாவின் வீட்டில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 5 பெண்கள் அணிந்திருந்த 50பவுண் நகைகளும், ஒரு கமறா, ஒரு மோட்டர், ரி. வி பூஸ்டர், சைக்கிள் டைனமோ ஹெட், ஒரு கலன் பெற்றோல் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கல்வியங்காட்டிலுள்ள எம். எஸ். மாசிலாமணி வீட்டில் பெண்கள் அணிந்திருந்த 1லட்சம் ரூபா பெறுமதியான 50 பவுண் நகைகளும், தொலைக்காட்சிப்பெட்டி, கஸட், மற்றும் வெள்ளிச் சாமான்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இவருக்குச்சொந்தமான சுமார் 25,000 ரூபா பெறுமதியான கோயில் நேர்த்திக்கடன் வெள்ளி சாமான்கள், பெறுமதிமிக்ககற்களும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளனவாம்.

கல்வியங்காட்டிலுள்ள என். வி. கந்தையா இல்லத்திற்குச் சென்ற இனந்தெரியாத எட்டு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி வீட்டிலிருந்த பெண்கள் அணிந்திருந்த நகைகளை கொள்ளையடித்ததாக கூறப்படுகிறது.

யந்திர துப்பாக்கி உட்பட சிறு துப்பாக்கிகள் வைத்திருந்தனரென்றும், சிலர் கிறிஸ் கத்தி வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

4 பெண்கள் உட்பட 6பேரை அறையில் வைத்துப் பூட்டிய பின் உரிமையாளர் க. அமிர்தலிங்கத்தைக் கண்களைக்கட்டி, கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடைக்கு கூட்டிச்சென்றதாக மேலும் கூறப்படுகிறது.

அச்சமயம் வீட்டிலுள்ளவர்கள் கூக்குரலிடவே அயல் வீட்டிலிருந்து மாமா வந்ததாகவும், அவரைத் தாக்கினார்களென்றும் கூறப்படுகிறது.

வெள்ளைநிற வானொன்றில் நகைக்கடைக்கு கூட்டிவந்து பூட்டுக்களை உடைத்து திறந்து நகைகள் வைக்கப்பட்டிருந்த இரு இரும்பு பெட்டிகளை வானில் ஏற்றிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

சுமார் 10லட்சம் பெறுமதியான ஓடர்நகைகளும், மற்றும் நகைகளும் இரு பெட்டிகளில் இருந்ததாகவும் எல்லாமாக 350பவுண் நகைகள் இருந்ததாகவும் கூறப்படுகிறது

இச்சம்பவத்தின்போது அமிர்தலிங்கம் நெஞ்சிலும், கண்ணிலும், பலமாக தாக்கப்பட்டதாகவும் அவரின் நெஞ்சில் இதனால் காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. நகைக்கடைக்குள் உள்ள அலுமாரி, மற்றும் தளபாடங்களும சேதமடைந்தனவாம்.

இரவு 2 மணி முதல் 3 மணி வரை நகைக்கடைக்குள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது

யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள மாசிலாமணி ஆபரண மாளிகையிலும் இதே இரவு கொள்ளை நடந்துள்ளது கல்வியங்காட்டிலுள்ள மாசிலாமணியின் வீட்டிற்கு இரவு 10 மணியளவில இனந்தெரியாத 8 பேர் துப்பாக்கிகளுடன் சென்று வீட்டில் பெண்கள் அணிந்திருந்த நகைகளை கொள்ளையடித்தபின் மாசிலாமணியை, வானில் நகைக்கடைக்கு கூட்டி வந்ததாக கூறப்படுகிறது.

6 பேர் துப்பாக்கி வைத்திருந்ததாகவும் இருவர் கிறிஸ் கத்தி வைத்திருந்ததாகவும், எல்லோரும் நீளக்கால்சட்டை அணிந்திருந்ததாகவும், கூறப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று யாழ். நகரிலுள்ள பெரும்பாலான நகைக்கடைகள் திறக்கப்படவில்லை. (க)

## குண்டுவெடிப்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று முன் தினம் காலை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு நபர்கள், பனந்தோப்புக்குள்ளிருக்கும் கிணற்றில் குளிப்பதற்காகச் சென்றதாகவும். சற்றுநேரத்தில் இரு குண்டுகள் வெடித்துச் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் அங்கு சென்று பார்த்தபோது இருநபர்களும் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இறந்த இருவரின் சடலங்களும் சின்னாபின்னமாக அங்கங்கள் சிதறிக்கிடக்கக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இக் குண்டுவெடிப்புச் சம்பவம் மர்மமான முறையில் இடம்பெற்றிருப்பதாகசசொல்லப்படுகிறது. [மா]

## யாழ். சென்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டது

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களினால் அதிகளவு இரத்தம் வெளியேறியிருந்ததால் சிகிச்சையின்போது அவருக்கு இரத்தம் செலுத்தவேண்டியிருந்தது.

### இரத்தம் வழங்க மாணவர் விரைவு

இதனையடுத்து அங்கு குழுமிநின்றவர்களிடம் 'ஓ' குறூப் இரத்தம் தரும்படி வைத்தியநிபுணர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அப்போது அங்குநின்ற சில மாணவர்கள் இரத்த தானம் வழங்குவதற்காக இரத்த வங்கியை நோக்கி ஓடத் தொடங்கினர்.

தொடர்ந்து இரத்தவங்கியிலிருந்து இரத்தம் கொண்டு வரப்பட்டபோதிலும் அவரது உயிரைக்காப்பாற்ற முடியவில்லை. அதிபர் ஆனந்தராஜா சுடப்பட்ட செய்தியறிந்து பாதிரிமார், மாணவர்கள் மற்றும் பல சட்டத்தரணிகள், கல்லூரி ஆசிரியர்கள், அதிபர்கள் அவரின் நெருங்கிய நண்பர்கள் ஆகியோர் தீவிரசிகிச்சைப்பிரிவுக்கு முன்னால் நிலைமைகளை அறிவதில் ஆர்வத்துடன் குழுமிநின்றனர்.

அதிபர் ஆனந்தராஜாவின் சடலம் பிரேதசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இன்று மரண விசாரணை நடைபெறும். (மா)

## 10 வருட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### அனுதாபம்

திரு. ஆனந்தராசாவின் மரணம் குறித்து இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு விசாரித்தார்.

தாம் அவரது பழைய மாணவர் என்றும் அவரது மரணம் ஒரு பேரிழப்பு என்றும் கவலை தெரிவித்தார். (மா)

## பீலிக்ஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதியின் எம். பி யாக இருந்த இவர் ஒரு சிறந்த வழக்கறிஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81 Eelanadu P. Box 49. Telegram Eelanadu. Telephone: 22389-24126.